வள்ளுவர்
இலக்கியத் திரட்டு

நான்காம் படிவம்

சிறப்புப் பகுதி

தொகுப்பாசிரியர்
வித்துவான். நா. சு. தியாகராசன்
தமிழாசிரியர்
ஹிந்து உயர்நிலைப்பள்ளி, சென்னை

வெளியிட்டோர்:
வசந்தம் பப்ளிஷர்ஸ்,
திருவல்லிக்கேணி, சென்னை 5

பதிப்புரிமை] [விலை அணா 12.

முதற் பதிப்பு, நவம்பர் 1953

[சென்னை அரசியலாரால் வெளியிடப்பட்டுள்ள
புதிய பாடத்திட்டத்தின்படி தொகுக்கப்பட்டுள்ளது.]

Printed at the Liberty Press, Madras. 1

முன்னுரை

வள்ளுவர் இலக்கியத் திரட்டு என்னும் பெயருடன் வெளிவரும் இந்நூல் நான்காம் படிவம்—சிறப்புப் பகுதிக்கு உரியது. இது சென்னை அரசியலாரின் கல்வித்துறையினர் அண்மையில் வெளியிட்ட தமிழ்ப் பாட இயலைத் தழுவித் தொகுக்கப்பட்டுள்ளது.

செய்யுள்: செய்யுட்பகுதி 200 வரிகளைக் கொண்டதாயிருத்தல் வேண்டும் என்பது புதிய பாடத்திட்டத்தின் விதியாகும். ஆசிரியர்கள் தமது விருப்பம் போல் தேர்ந்தெடுத்துக் கொள்ளவும், ஓய்வு நேரத்தில் மாணவர் தாமே படித்துப் பயன் பெறவும் இப்புத்தகத்தில் ஏறக்குறைய 270 வரிகள் கொடுக்கப்பட்டுள்ளன. ஆசிரியர் குறிப்பும் அரும்பதவுரையும் இறுதியில் தனித்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

உரைநடை: பழந்தமிழ் உரைநடை, நீதிக்கதைகள் முதலிய பல துறைகளைச் சார்ந்த கட்டுரைகள் பாடங்களாகத் தேர்தெடுக்கப்பட்டுள்ளன.

இந்நூலுள் தத்தம் பாடல்களையும், கட்டுரைகளையும் சேர்த்துக் கொள்ள இசைவு தந்தருளிய பேரறிஞர்களுக்கும், உரிமையாளர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றி உரியது.

இதனை நன்முறையில் வெளியிட்டு உதவிய "வசந்தம் பப்ளிஷர்ஸ்" உரிமையாளருக்கு எனது நன்றியறிதலைச் செலுத்துகின்றேன். தமிழ்மொழிப் பற்றுடைய யாவரும் இந்நூலினை ஏற்று ஆதரவளிக்குமாறு வேண்டுகின்றேன்.

சென்னை 5
15-10-'53

ந. சு. தியாகராசன்.

உள்ளுறை

செய்யுள்

எண்	பொருள்			பக்கம்
I.	வாழ்த்துப் பகுதி			
	1. இறைவன் தன்மை	....	....	1
	2. சகல கலாவல்லி மாலை	....	....	1
II.	அறவுரைப் பகுதி			
	1. திருக்குறள்	....	....	2
	2. பழமொழி	....	....	3
	3. நீதி வெண்பா	....	....	4
III.	கதைப் பகுதி			
	1. வில்லி பாரதம்	....	....	5
	2. பாஞ்சாலி சபதம்	....	....	8
IV.	சிறு நூல்கள்			
	1. திருவாரூர் நான்மணி மாலை	....	....	9
V.	பல்சுவைப் பகுதி			
	1. சிலேடை	....	....	10
	2. தமிழ் நாடு	....	....	10
	3. சீட்டுக் கவி	....	....	11
	4. மலரும் மாலையும்	....	....	11

உரைநடை

எண்	பொருள்			பக்கம்
1.	பழந்தமிழ் உரைநடை	....	....	12
2.	சமரசம் உண்டாவதற்குரிய உண்மைநெறி .... திரு. நாரண துரைக்கண்ணன்			14
3.	வேதநாயகம் பிள்ளை ரா. பி. சேதுப்பிள்ளை, பி.ஏ., பி.எல்.,	....	....	19
4.	சிறுகதைகள் திரு. A. S. பஞ்சாபகேச அய்யர், M.A., I.C.S.	....	....	26
5.	படக்காட்சி வித்துவான், பாலூர் து. கண்ணப்ப முதலியார் P.O.L.	....	....	29
6.	இசை இன்பம் மகா மகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாத அய்யர்	....	....	33
7.	மாணக்கர் கடமை வித்துவான், என். எஸ். டி. சர்மா	....	....	39
	குறிப்புரை	....	....	43

வள்ளுவர்
இலக்கியத் திரட்டு
நான்காம் படிவம்: சிறப்பு

செய்யுள்

I. வாழ்த்துப் பகுதி

1. இறைவன் தன்மை

1. உலகெலாம் படைத்துக் காத்தே உருவிலா தழித்துநாளும்
உண்மையாய் எண்ண மாளா ஒருவனாய் அருவ னாகிச்
சலமிலா தெண்ணு வோர்க்குச் சத்திய மயமே யாகித்
தனித்தனி பிரித்த போதும் தானதிற் பிரியா னாகி
மலரின்மேல் தேவ னாகி மாதொரு பாக னாகி
மாலொடு புத்த னாகி மகம்மதாய் ஏசு வாகிப்
பலபல தெய்வ மாகிப் பற்பல மதங்க ளாகிப் [போற்றி.
பக்குவப் படியே தோன்றும் பரமனார் பெருமை

—நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை.

2. சகல கலாவல்லி மாலை

2. மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவில் பணியச்செய்
வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பிலுன்போல்
கண்கண்ட தெய்வ முளதோ
சகல கலாவல்லியே.

—குமரகுருபர சுவாமிகள்.

II. அறவுரைப் பகுதி

1. திருக்குறள்

கல்வி

1. கற்க கசடறக் கற்பவை கற்றபி
னிற்க வதற்குத் தக.

2. எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங்
கண்ணென்ப வாழு முயிர்க்கு.

3. கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.

4. உவப்பத் தலைக்கூடி யுள்ளப் பிரித
லனைத்தே புலவர் தொழில்.

5. உடையார்மு னில்லார்போ லேக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லா தவர்.

6. தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு.

7. யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு.

8. ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற்
கெழுமையு மேமாப் புடைத்து.

9. தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்.

10. கேடில் விழுச் செல்வங் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை.

கேள்வி

1. செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வ மச்செல்வஞ்
செல்வத்து ளெல்லாந் தலை.

2. செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கு மீயப் படும்.

3. செவியுணவிற் கேள்வி யுடையா ரவியுணவி
னான்றாரோ டொப்பர் நிலத்து.

4. கற்றில னாயினுங் கேட்க வஃதொருவற்
கொற்கத்தி னூற்றாந் துணை.

5. இழுக்க லுடையுழி யூற்றுக்கோ லற்றே
யொழுக்க முடையார்வாய்ச் சொல்.

6. எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்.

7. பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லா ரிழைத்
தீண்டிய கேள்வி யவர். [துணர்ந்

8. கேட்பினுங் கேளாத் தகையவே கேள்வியாற்
றோட்கப் படாத செவி.

9. நுணங்கிய கேள்விய ரல்லார் வணங்கிய
வாயின ராத லரிது.

10. செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்க
ளவியினும் வாழினு மென்.

—திருவள்ளுவர்.

2. பழமொழி

உலோபியின் செல்வம்

1. வழங்கலும் துய்த்தலும் தேற்றாதான் பெற்ற
முழங்கு முரசுடைச் செல்வம்—தழங்கருவி
வேய்முற்றி முத்துதிரும் வெற்ப, அதுவன்றே
நாய்பெற்ற தெங்கம் பழம்.

ஈகை

2. இரப்பவர்க் கீயக் குறைபடுமென் றெண்ணிக்
கரப்பவர் கண்டறியார் கொல்லோ—பரப்பில்
துறைத்தோணி நின்றுலாந் தூங்குநீர்ச் சேர்ப்ப,
இறைத்தோறு மூறுங் கிணறு.

ஒழுக்கம்

3. கெடுவல் எனப்பட்ட கண்ணும் தனக்கோர்
வடுவல்ல செய்தலே வேண்டும்—நெடுவரை
முற்றுநீர் ஆழி வரையகத்து ஈண்டிய
கல்தேயும் தேயாது சொல்.

இன்னா செய்யாமை

4. நெடியது காண்கிலாய் நீயெளியை; நெஞ்சே!
கொடியது கூறினாய் மன்ற—அடியுளே
முற்பகல் கண்டான் பிறன்கேடு தன்கேடு
பிற்பகல் கண்டு விடும்.

—முன்றுறை யரையனார்.

3. நீதிவெண்பா

தோற்றங் கண்டு மதித்தலாகாது

1. கற்பூரம் போலக் கடலுப் பிருந்தாலும்
கற்பூர மாமோ கடலுப்பு?—பொற்பூரும்
புண்ணியரைப் போல இருந்தாலும் புல்லியர்தாம்
புண்ணியரா வாரோ? புகல்.

கற்றோரே சிறந்தவர்

2. கல்லார் பலர்கூடிக் காதலித்து வாழினுமால்
வல்லான் ஒருவனையே மாணுவரோ?—அல்லாரும்
எண்ணிலா வான்மீன் இலகிடினும் வானகத்தோர்
வெண்ணிலா ஆமோ? விளம்பு.

ஊழ்வினையின் வலிமை

3. தானே புரிவினையாற் சாரு மிருபயனும்
தானே யனுபவித்தல் தப்பாது—தானூறு
கோடிகற்பஞ் சென்றாலுங் கோதையே செய்தவினை
நாடிநிற்கு மென்றார் நயந்து.

III. கதைப் பகுதி

1. வில்லி பாரதம்

கண்ணன் தூது

தருமன் கண்ணனுக்குத் தூதுபேசும் வகையினை எடுத்துக்கூறுதல்

1. "நீதூது நடந்தருளி எமதுநினைவு
அவர்க்குரைத்தால் நினைவின் வண்ணம்
தாதூதி அளிமுரலுந் தண்பதியுந்
தாயமுந்தான் தாரா னாகில்
மீதூது வளைக்குலமும் வலம்புரியும்
மிகமுழங்க வெய்ய காலன்
மாதூதர் மனங்களிக்கப் பொருதெனினும்
பெறுவன்; இது வசையும் அன்றே!

2. மூந்தூர்வெம் பணிக்கொடியோன் மூதூரில்
நடந்துழவர் முன்றில் தோறும்
நந்தூரும் புனல்நாட்டின் திறம்வேண்டு;
நாடொன்று நல்கான் ஆகில்
ஐந்தூர் வேண்டு; அவையிலெனில் ஐந்திலம் வேண்டு
அவைமறுத்தால் அடுபோர் வேண்டு;
சிந்தூரத் திலகநுதல் சிந்துரத்தின்
மருப்பொசித்த செங்கண் மாலே!

தருமனது வார்த்தையைக் கேட்டு வீமன் வெறுப்படைதல்

3. மூத்தோன்மற்று இவையுரைப்ப இளையோன்வெஞ்
சினம்மனத்தில் மூள மூள
காத்தோமில் உரைபதறக் கதுமெனவுற்று
எழுந்திறைஞ்சி, ஞால மெல்லாம்
பூத்தோனே! பூந்தவிசில் பூவைபுணர்
மணிமார்பா! புன்மை யாவும்
தீர்த்தோனே! ஊனமில்லான் மானமில்லாது
உரைப்பதற்கு என்செய்வது? என்றான்.

வீமன் தருமனைப் பார்த்து வெகுண்டு பேசுதல்

4. விரிகுழல்பைந் தொடிநாணி வேத்தவையில்
முறையிடுநாள் ‘வெகுளேல்!’ என்று
மரபினுக்கும் நமக்குமுலகு உள்ளளவுந்
தீராத வசையே கண்டாய்;
எரிதழற்கா னகமகன்றும் இன்னமும்வெம்
பகைமுடிக்க இளையா நின்றாய்!
அரவுயர்த்தோன் கொடுமையினும் முரசுயர்த்தோய்!
உனதருளுக்கு அஞ்சினேனே.

5. ‘கானாள உனைவிடுத்த கண்ணிலா
அருளிலிதன் காதல் மைந்தன்
தானாளுந் தரணியெலாம் ஒருகுடைக்கீழ்
நீயாளத் தருவன் இன்றே;
மேனாள்நம் உரிமையறக் கவர்ந்தபெருந்
துணைவனுனை வெறாத வண்ணம்
வானாள வானவர்கோன் தன்பதமற்று
அவன்தனக்கே வழங்குவேனே.

வீமன் கண்ணனை நோக்கிக் கூறுதல்

6. ‘போர்முடித்தான் அமர்பொருது; புலம்புறுசொற்
பாஞ்சாலி பூந்தண் கூந்தல்
கார்முடித்தான்; இளையோர்முன் கழறியவெஞ்
சினம்முடித்தான்; கடவுட் கங்கை
நீர்முடித்தான் இரவொழித்த நீயறியப்
பூதலத்தின் நிலைநின்று ஓங்கும்
பேர்முடித்தான்; இப்படியே யார்முடித்தார்?
இவனுடனே பிறப்பதே நான்!’

7. அணிந்துவருஞ் சமரிலெதிர்ந்து அரவுயர்த்தோ
னுடன்அரசர் உடலமெல்லாம்
துணிந்திரண்டு படப்பொருது தொல்லையுள
அரசாளத் துணிவது அல்லால்

தணிந்தறமுங் கிளையுறவுங் கொண்டாடித்
தானின்னந் தனித்தூது ஏவிப்
பணிந்திறந்து புவிபெற்றுண்டு இருப்பதற்கே
துணிகின்றான் பட்ட பாடே.

தருமன் வீமனைச் சமாதானப்படுத்துதல்

8. பரிவுடன் மற்று இவைகூறும் பவனகுமா
ரனையலர்க்கை பணித்து நோக்கிக்
குருகுலத்தோர் போரேறே! குற்றமது
பார்க்குங்காற் சுற்றமில்லை;
ஒருகுலத்திற் பிறந்தார்க ளுடன்வாழும்
வாழ்வினைப்போல் உறுதி யுண்டோ?
இருவருக்கும் வசையன்றோ இருநிலங்கா
ரணமாக எதிர்ப்பது? என்றான்.

வீமன் தருமனிடங் கூறுதல்

9. சூடுகின்ற துழாய்முடியோன் சுரருடனே
முனிவர்களும் சுருதி நான்கும்
தேடுகின்ற பதஞ்சிவப்பத் திருநாடு
பெறத்தூது செல்ல வேண்டா;
வாடுகின்ற மடப்பாவை தன்வரமும்
என்வரமும் வழுவா வண்ணம்
கோடுகின்ற மொழியவன்பால் எனைத்தூது
விடுகஇனிக் கொற்ற வேந்தே!

10. மலைகண்ட தெனவெங்கைம் மறத்தண்டின்
வலிகண்டும், மகவான் மைந்தன்
சிலைகண்டும், இருவர்பொருந் திறங்கண்டும்,
எமக்காகத் திருமால் நின்ற
நிலைகண்டும், இவள்விரித்த குழல்கண்டும்,
இமைப்பொழுதில் கோரார் தம்மைக்
கொலைகண்டு மகிழாமல் அவன்குடைக்கீழ்
உயிர்வாழக் குறிக்கின்றாயே!'

அருச்சுனன் தருமனையும் கண்ணனையும் பார்த்துக் கூறுதல்

11. பொன்னாருந் திகிரியினான் போனாலும்
பொறைவேந்தன் புகன்ற வெல்லாம்
சொன்னாலும் அவன்கேளான் விதிவலியாற்
கெடுமதிகண் தோன்றாது அன்றே?
எந்நாளும் உவர்நிலத்தில் எள்முளைவித்
திடினும்விளை வெய்திடாது;
பன்னகந் தனக்கமிர்தங் கொடுத்தாலும்,
விடமொழியப் பயன்கொடாதே.

[அதன் பிறகு நகுலசகதேவரது கருத்தையும் அறிந்துகொண்டு கண்ணன் அத்தினபுரிக்குத் தூது செல்கிறான்.]

—வில்லிபுத்தூரார்.

2. பாஞ்சாலி சபதம்

சூதாட்டச் சருக்கம்

அத்தினபுரி மக்கள் பாண்டவருக்கு வரவேற்பு அளித்தல்

அத்தின மாநகரத்தினில் வந்தனர் வந்தனர்
ஆரியப் பாண்டவ ரென்றது கேட்டலும்,
தத்தி எழுந்தன எண்ணருங் கூட்டங்கள்;
சந்திகள் வீதிகள் சாலைகள் சோலைகள்

எத்திசை நோக்கினும் மாந்தர் நிறைந்தனர்.
இத்தனை மக்களும் எங்கணி ருந்தனர்
இத்தின மட்டும் எனவியப் பெய்துற
எள்ளு விழற்கிட மின்றி யிருந்தார்.
மந்திர கீத முழக்கினர் பார்ப்பனர்;

வன்றடந் தோள்கொட்டி ஆர்த்தனர் மன்னவர்
வெந்திறல் யானையும் தேரும் குதிரையும்
வீதிகள் தோறு மொலிமிகச் செய்தன;
வந்தியர் பாடினர், வேசைய ராடினர்;
வாத்தியங் கோடி வகையி னொலித்தன;

செந்திரு வாழும் நகரினி லத்தினஞ்
சேர்ந்த ஒலியைச் சிறிதென லாமோ?
வாலிகன் றந்ததோர் தேர்மிசை ஏறிஅம்
மன்னன் யுதிட்டிரன் தம்பியர் மாதர்கள்
நாலிய லாம்படை யோடு நகரிடை
நல்ல பவனி எழுந்த பொழுதினில்,
சேலியல் கண்ணியர் பொன்விளக் கேந்திடச்
சீரிய பார்ப்பனர் கும்பங்க ளேந்திடக்
கோலிய பூமழை பெய்திடத் தோரணங்
கொஞ்ச, நகரெழில் கூடிய தன்றே.

—சுப்பிரமணிய பாரதியார்.

IV. சிறுநூல்கள்

1. திருவாரூர் நான்மணிமாலை

நேரிசை ஆசிரியப்பா

தானமால் களிறும் மாநிதிக் குவையும்
ஏனைய பிறவும் ஈகுநர் ஈக
நலம்பா டின்றி நாண்துறந் தொரீஇ
இலம்பா டலைப்ப ஏற்குநர் ஏற்க
புரவலர் புரத்தலும் இரவலர் இரத்தலும்
இருவே றியற்கையும் இவ்வுல குடைத்தே
அதான்று
ஒருகா லத்தில் உருவமற் றொன்றே
இடப்பால் முப்பத் திரண்டறம் வளர்ப்ப
வலப்பால் இரத்தல் மாநிலத் தின்றே.
விண்தொட நிவந்த வியன்றுகிற் கொடிகள்
மண்டலம் போழ்ந்து மதியக டுடைப்ப
வாணிலா வமுதம் வழங்கியக் கொடிகள்
வேனிலிற் பயின்ற வெப்பம தாற்றுபு
கொடியா ரெத்துணைக் கொடுமை செய்யினும்
மதியார் செய்திடும் உதவியை யுணர்த்தும்
பன்மணி மாடப் பொன்மதிற் கமலைக்
கடிநகர் வைப்பினிற் கண்டேம்
வடிவ மற்றிது வாழிய பெரிதே.

நேரிசை வெண்பா

2 பெருமான் தமிழ்க்கமலைப் பெம்மான்கைம் மானும்
கருமா னுரியதனுங் கச்சும்—ஒருமானும்
சங்கத் தடங்காதும் தார்மார்புங் கண்டக்கால்
அங்கத் தடங்கா தவா.

கட்டளைக் கலித்துறை

3 வாவியம் போருகஞ் சூழ்கம லேசர்புள் வாய்கிழித்த
நாவியம் போருகத் தோறுநின் றோர்துணைத் தாளடைந்த
ஆவியம் போருகத் தாயிரங் கூற்றுடன் றூலும்அஞ்சேல்
நாவியம் போருக நன்னெஞ்ச மேயவர் நாமங்களே.

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

4 நாம வேற்படைக் கடவுளைப் பயந்தருள்
நங்கைதென் கமலேசர்
வாம பாகத்தைக் கொளவலப் பாகநீர்
மங்கைகொண் டாள்போலாம்
தாம நீற்றொளி தன்னிறங் காட்டவெண்
தலைநிரை நுரைகாட்டக்
காமர் பூங்கொடி மடந்தையர் மதர்விழிக்
கயலுலா வரலாலே.

—குமர குருபரர்.

V. பல்சுவைப்பகுதி

1. சிலேடை

சிவனுக்கும் தேங்காய்க்கும்

கல்லா லடியுறலாற் கண்மூன் றிருப்பதனால்
எல்லோரும் பூசைக் கெடுத்திடலால்—வல்லோடு
கொள்ளுகையாற் கங்கா குலமுத்து சாமியன்றோ
கள்ளிதழி யானிகர்தேங் காய்.

—அழகிய சொக்கநாத பிள்ளை.

2. தமிழ்நாடு

பண்பரந்த இயற்கைநெறி பற்றிநின்ற நாடு
பற்றியதன் வழிஇறையைப் பார்த்தபெரு நாடு
தண்ணியற்கை நெறியொன்றே சமயமெனு நாடு
சாதிமதப் பன்மைகளைச் சகியாத நாடு

மண்பிறப்பில் உயர்வுதாழ்வு வழங்காத நாடு
மக்களெல்லாம் சமமென்னும் மாண்புகண்ட நாடு
பெண்மணிகள் உரிமையின்பம் பெற்றிருந்த நாடு
பெரும்பொதுமை யுளங்கொண்டு பிறங்குதமிழ் நாடே.

—திரு. வி. க.

3. சீட்டுக்கவி

ஏடாயி ரங்கோடி எழுதாது
    தன்மனத் தெழுதிப் படித்தவிரகன்
இடசேது பரியந்தம் எதிரிலாக்
    கவிவீர ராகவன் விடுக்குமோலை
சேடாதி பன்சிர மசைத்திடும்
    புகழ்பெற்ற திரிபதகை குலசேகரன்
தென்பாலை சேலம் புரந்துதா
    கந்தீர்த்த செழியனெதிர் கொண்டுகாண்க.
பாடாத கந்தருவம் எறியாத
    கந்துகம் பற்றிக் கொலாதகோணம்
பறவாத கொக்(கு)அனற் பண்ணாத
    கோடையும் படையில் தொடாதகுந்தம்
சூடாத பாடலம் பூவாத மாவொடு
    தொடுத்துமுடி யாத சடிலம்
சொன்னசொல் சொல்லாத கிள்ளையொன்
    றெங்குந் துதிக்கவர விடல்வேண்டுமே.

—அந்தகக்கவி வீரராகவ முதலியார்.

4. மலரும் மாலையும்

பருவமழை பொய்யாது பெய்ய வேண்டும்;
பயிர்களெல்லாம் செழித்தோங்கி வளர வேண்டும்;
தருமநெறி தவறாது தழைக்க வேண்டும்;
சாதிமதச் சண்டையெலாம் ஒழிய வேண்டும்;
திருமகளும் கலைமகளும் சிறக்க வேண்டும்;
தேசாபி மானமெங்கும் திகழ வேண்டும்;
கருமமெலாம் நற்கரும மாக வேண்டும்;
காந்திமதி! நின்னடிகள் வாழ்த்தி னேனே.

—கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை.

உரை நடை

1. பழந்தமிழ் உரைநடை

1. பரிமேலழகர் உரை

கடவுள் வாழ்த்து

அஃதாவது கவி தான் வழிபடு கடவுளையாதல் எடுத்துக் கொண்ட பொருட்கு ஏற்புடைக் கடவுளையாதல் வாழ்த்துதல். அவற்றுள் இவ்வாழ்த்து ஏற்புடைக் கடவுளையென வறிக. என்னை? சத்துவ முதலிய குணங்களான் மூன்றாகிய உறுதிப் பொருட்கு அவற்றான் மூவராகிய முதற்கடவுளோடு இயைபுண்டாகலான். அம்மூன்று பொருளையுங் கூறலுற்றார்க்கு அம் மூவரையும் வாழ்த்துதல் முறைமையாகலின், இவ்வாழ்த்து அம் மூவர்க்கும் பொதுப்படக் கூறினார் என உணர்க.

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு.

எழுத்துக்கள் எல்லாம் அகரமாகிய முதலையுடையன; அது போல உலகம் ஆதிபகவனாகிய முதலையுடைத்து.

—திருக்குறள்

2. அடியார்க்குநல்லார் உரை

நாம் திங்களைப் போற்றுவேம்; திங்களைப் போற்றுவேம்; அஃது எற்றுக்கெனின், தாது பரத்தல் செய்த மாலையை உடைய சென்னியுடைய குளிர்ச்சியை உடைய வெண்குடை போன்று பொதுவுற இவ்வுலகிற்கு அளிசெய்தலா னென்க.

நாம் ஞாயிற்றைப் போற்றுவேம்; ஞாயிற்றைப் போற்றுவேம்; அஃது எற்றுக்கெனின், காவிரி நாட்டை உடையவனுடைய ஆழிபோலப் பொலிவுபெற்ற கொடுமுடியையுடைய மேருவை வலமாகத் திரி தருதலானென்க.

நாம் பெரிய மழையைப் போற்றுவேம்; பெரிய மழையைப் போற்றுவேம்; அஃது எற்றுக்கெனின், அச்சத்தைத் தரும் கடல் சூழுலகிற்கு அவன் அளி செய்யுமாறு போல மாறாது மேலாய் நின்று தன் பெயலான் வளத்தைச் சுரத்தலான் என்க.

நாம் புகாரைப் போற்றுவேம்; புகாரைப் போற்றுவேம்; அஃது எற்றுக்கெனின், மிக்க கடலை வேலியாக உடைய உலகின்கண் அவன் குலம் புகழ்வார் இதனையும் புகழ்வாராகலின் என்க.

—சிலப்பதிகாரம்.

3. புறநானூற்று உரை

கோப்பெருஞ் சோழன் வடக்கிருந்தானுழைச் சென்ற பிசிராந்தையாரைக், "கேட்கும் காலம் பலவாலோ? நரை நுமக் கில்லையாலோ?" என்ற சான்றோர்க்கு அவர் சொற்றது:—

'நுமக்குச் சென்ற யாண்டுகள் பலவாயிருக்க நரையில்லை யாகுதல் எப்படியாயினீரெனக் கேட்டீராயின், என்னுடைய மாட்சிமைப்பட்ட குணங்களையுடைய மனைவியுடனே புதல்வரும் அறிவு நிரம்பினர்; யான் கருதிய அதனையே கருதுவர் என்னுடைய ஏவல் செய்வாரும்; அரசனும் முறையல்லாதன செய்யா னுய்க் காக்கும்; அதற்கு மேலே யான் இருக்கின்ற ஊரின்கண் நற்குணங்களால் அமைந்து பணியவேண்டும் உயர்ந்தோரிடத்துப் பணிந்து ஐம்புலனும் அடங்கிய கோட்பாட்டினையுடைய சான்றோர் பல்லாராதலான்.'

பயிற்சி

1. வாழ்த்து எத்தனை வகைப்படும்? என்னென்ன?
2. முக்குணங்கள் யாவை?
3. இவ்வாழ்த்து எவ்விதம் அமைந்துள்ளது?
4. திங்கள், ஞாயிறு, பெருமழை, புகார் இவற்றைப் போற்றுதற்குக் கூறப்பட்ட காரணங்களை விளக்குக.
5. தமக்கு நரைதோன்றாமைக்குப் பிசிராந்தையார் கூறிய காரணங்களைத் தொகுத்துக் கூறுக.

2. சமரசம் உண்டாவதற்குரிய உண்மை நெறி

[திரு. நாரணதுரைக் கண்ணன் அவர்கள்]

சமரசம் என்னும் சொற்கு "மக்கள் யாவரையும் ஒன்று படுத்தல்" என்பது முடிந்த பொருள். மக்கள் என்னுஞ் சொல் ஒரு சிறு பகுதியினரைக் குறிக்குமா? அன்றி ஒரு நாட்டினரைக் குறிக்குமா? அல்லது இப்பரந்த உலகிலுள்ள மக்கள் யாவரையுமே குறிக்குமா? என ஆராய்ந்தால், அகன் ஞாலத்திலுள்ள மக்கள் யாவரையுமே குறிக்கும் எனத் தெரியலாம்.

நாடு, மொழி, இனம் என்னும் பல திறப்பட்ட உலகில் சமரசம் நிலவுதல் யாங்ஙனம்? ஒரு சிறு பகுதியினராயுள்ள மக்களுள்ளேயே பிணக்கமும், கலகமும், பூசலும் விளைந்து ஒற்றுமைப் படாமல் இருப்பதை நாம் கண்கூடாக இஞ்ஞான்றும் காண்கின்றனமே; அவ்விதமிருக்க, இங்கில உலகத்திலுள்ள மக்களை ஒருவரோடொருவர் அளவளாவி மகிழும்படி ஒற்றுமைப்படுத்துதல் என்பது ஊமை பகற்கனவு காண்பது போலவும், காலில்லா முடவன் ஆகாயத் தாமரையைப் பறிக்கத் துறக்கத்துக்குச் சென்றது போலவும் அன்றோ முடியும்! ஆதலின் சமரசம் என்னுஞ் சொல் வரிவடிவிலேயும், ஒலி வடிவிலேயும் நிலவலாமே யன்றிச் செயலளவில் காண முடியாதோ, எனின், நன்று வினவினுய்! நீ சொல்லும் மாற்றம் இற்றைஞான்று ஒருவாறு பொருந்துமெனினும், பண்டைக் காலத்திலே சமரசம் என்பது சொல்லளவிலே யன்றிச் செயலினும் மிக்குத் திகழ்ந்தது.

ஆ! யாங்கணும் சமரசம்! யாண்டும் ஒற்றுமை! எங்கணும் சகோதரப்பான்மை! ஒரே தாய் தந்தைக்குப் பிறந்த மக்களே போல நம் முன்னோர் அன்பு பூண்டு ஒழுகி வதிதருவாராயினர். அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச் சொல் முதலிய வெம்மைக் குணங்கட்கு இரையாகாது, மக்கள் செம்மைக் குணங்களைக் கடைப் பிடித்து அளவளாவி மகிழ்ந்தனர் என்று சொல்வது மிகையாகாது.

பண்டைக் காலத்திலே அதாவது 60,000 ஆண்டுகளுக்கு முன் மக்கள் யாவரும் ஒன்று கூடியே வாழ்ந்து வந்தனர். அவ்வாறு வாழ்ந்து வந்த மக்கள் தங்கள் வாழ்க்கையை முதலில் மலையில் தொடங்கி — குறிஞ்சி நிலத்தில் துவங்கிப் — பின்னர் முல்லை நிலத்திலும், மருத நிலத்திலும், நெய்தல் நிலத்திலும் குடியேறி வாழ்வு நடத்தலாயினர் என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

இங்ஙனம் ஒன்று கூடியிருந்து வாழ்ந்துவந்த மக்கள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நிலங்களில் நாளடைவில் அவ்வந் நிலத்திற்கேற்ற தெய்வங்களையும், வழக்க வொழுக்கங்களையும் கடைப்பிடித்து ஒழுகி வரலாயினர்.

இவ்வாறு மக்கள் அறிவு விளக்கமுற உற, தங்கள் வாழ்க்கையைச் செம்மைப்பட நடத்தி வரவேண்டித் தங்களுள் கல்வியறிவொழுக்கங்களிற் சிறந்தவர்களை அந்தணரென்றும், கல்வியறிவொழுக்கத்தோடு உடல் வன்மையும், மனத் திண்மையும் உடையவர்களை அரசினர் என்றும், உலக அனுபவமே யன்றி வாழ்க்கைக்கு வேண்டும் உணவுப் பொருள்களை யெல்லாம் திரட்டிச் சேகரிப்பவர்களை வணிகர் என்றும், உழவு வல்லாரை வேளாளர் என்றும், ஏனைத்தொழில் செய்வோரைப் பல்வேறு வகைத் தொழிலாளர் என்றும் பிரித்துக் கொண்டனர். ஆயின், அவர்கள் நில வேறுபாட்டாலும் தொழின்முறை பற்றிப் பிரித்த பிரிவாலும் உயர்வு தாழ்வுகளைக் கற்பித்துக்கொள்ளாது சமரசத்துடன் வாழ்ந்து வந்தார்கள்.

இனி, ஒல்காப் பெரும் புகழ்த் தொல்காப்பிய தேவர் காலத்திலும், தெய்வப் புலமைசான்ற திருவள்ளுவ நாயனார் காலத்திலும் இம் முறையிலேயே சமரசம் மக்களிடையே மிளிர்ந்து தலைசிறந்து விளங்கியது. அந்நாள் சமரசம் ஓங்கி வளர்ந்த பெருநாள்! சமரசம், அன்பு என்னும் அரியணையின்மீது அமர்ந்து, அறம் என்னும் செங்கோலைத் தாங்கி, நீதி என்னும் மணிமுடியைத் தரித்துச் செம்மாப்போடு உலகம் யாவையும் தனி யரசாண்டது. ஆ! அஞ்ஞான்றைய வளங்கெழுமிய நாட்டின் சிறப்பையும், அதில் வாழ்ந்த மக்களின் அன்பு கலந்த — அளவளாவிய — ஒற்

றுமையையும், அம்மக்கள் நடத்திய அன்புளங் கெழுமிய இன்ப வாழ்க்கையையும் அக்காலத்தில் இருந்த புலவர் பெருமக்கள் பாடிய பெருநூல்களுட் காணும்போது எம் மனத்தில் இன்பவூற் றுப் பெருக்கெடுத்து ஓடுவதை என்னென்பேம்!

அவ்வித நன்னாளை—யாவரும் ஒன்று கூடி அளவளாவும் பெருநாளை என்று காண்போம், என்று காண்போம் என்று எம் உள்ளம் விழைகின்றது.

இங்ஙனம் தொல்காப்பிய தேவர் காலத்திலும், திருவள்ளுவ தேவர் காலத்திலும் உலக முழுவதையும் ஒரு கோலோச்சி அரியணைமிசை அரசு வைகிய சமரசமானது வீழ்ந்து படுதற்குக் காரணமென்னையென்று அருவியாராயின் மக்களுள் ளத்தில் தம்முள் ஒருவரையொருவர் அடக்கியாளுதல் வேண்டும் என்னும் தீய எண்ணங் கொண்டதனாலேயே என்பது நன்கு விளங்கும். அவ்வெண்ணம் மேலெழ எழ உலகியல் செவ்வனே நடைபெறற் பொருட்டுப் பார்ப்பனர், அரசினர், வாணிபர், உழ வர் என நான்கு பிரிவினராய்த் தொழின் முறையைப்பற்றிப் பிரிந்த மக்கள் தம்முள் ஏற்றத்தாழ்வுகளை வகுத்துத் தொழிற் பிரிவுகளைப் பிறப்புப் பிரிவுகளாக மாற்றிக் கொள்ளலாயினர்.

இவ்வாறு இயற்கையறிவோடு திகழ்ந்து சமரசத்தில் வைகிய மக்கள் செயற்கைக் குணங்களைக் கடைப்பிடித்து ஒற்றுமை யென்னும் கட்டையறுத்துத் தொழின் முறையைப் பற்றிய பிரி வைப் பிறப்புப் பிரிவாகக்கொண்டு சிறு சிறு இனங்களாய் வேறு படுதலும், இவ்வித வேறுபாட்டால் யாண்டும் கலாமும், பிணக்க மும், போரும், பூசலும் மிகுதிப்படலாயின.

இனி, இவ்விதம் மக்களிடையே கலாமும் பூசலும் நிகழ்ந்த காலத்துத்தான், பொருள் படைத்த பெரியோர்கள் தோன்றி அமைதியை யுண்டாக்கிச் சமரசத்தை நிலவச் செய்தற்கு வேண்டு வனவாய செம்மை நெறியைக்கோலி, மக்களை அந்நெறியில் செலுத்தி—அந்நெறியைக் கடைபிடித்து ஒழுகுமாறுகற்பித்துப்— போந்தனர். அவ்வான்றோர்கள் செப்பமுடைய செல்வர்களாத

கின் அவ்வக்காலத்திருந்த மக்களின் உள்ள நிலையை யறிந்து அதற்கேற்றவாறு உண்மை நெறியை — சன்மார்க்கத்தை — நிலை நிறுத்திச் சமரசத்தைப் பரவச் செய்தனர்.

இவ்வாறு செங்நெறிச் செல்வர்களாய, திருவள்ளுவ தேவர், இடப தேவர், மஹாவீரர், புத்தர், இயேசுநாதர், மகம்மது நபி முதலிய பெரியார்கள் சமரசத்தை மக்களிடம் பரவச் செய்வதற்குத் துணைபுரிவதாய உண்மை நெறியை அவரவர்கள் காலத்திற்கும் நாட்டிற்கும் ஏற்ற முறையில் காட்டிச் சென்றனர். அப்பெரியார்களைப் பின் பற்றியவர்கள் (Followers) சமரச முறையைக் கைவிட்டுத் தம்முள் சமயப் பகைமை பாராட்டுவாராயினர். எனவே, சமரசத்திற்கென எழுந்த இயக்கங்கள் இஞ்ஞான்று அதனைக் குலைத்தற்கு ஏதுக்களாய் — கருவிகளாய் — அவ்வியக்கத்தைப் பின்பற்றிய மக்களால் கொள்ளப்பட்டு வருகின்றனவெனின் சமரசம் எங்ஙனம் தலை காட்டும்?

இஞ்ஞான்று நம் நாட்டின் — இந்தியாவின் — நிலையை நோக்குங்கள். ஒருநாடு மற்றொரு நாட்டை இழிக்கின்றது. ஒரு கண்டத்திலுள்ள மக்கள் மற்றொரு கண்டத்திலுள்ள மக்களை இழிவாக நினைத்துப் பழிக்கின்றனர். தேசியச்சண்டை எத்துணை! ராஜீயச் சண்டை எத்துணை! சமயப்பிணக்கு எவ்வளவு! சாதிப் போர் எவ்வளவு! இவ்வித நெருக்கடியான நிலையில் சமரசஞ் சமரசம் என்று வெறும் பேச்சளவில் முழக்கம் செய்தல் என்ன பயனை விளைக்கும்? எழுதுகோல்கொண்டு வரைவதால் என்ன பயனுண்டாம்? சமரசத்தையும், சகோதரத்துவத்தையும் மக்களிடை யுண்டாக்கி அவர்கள் தன்மதிப்பைப் பெறச் செய்வோம் என்று அறைகூவும் சீர்திருத்தக்காரர்கள் (Reformers) என்போர் பல இடங்களிலும் சமரசம் உண்டாதற் குரிய நெறிகளைக் காண முயலுதல் வேண்டும். இவ்வித வழிகளைக் கல்வியறிவின் முதிர்ச்சியும் உலக அனுபவமும் வாய்ந்த அறவோர்களின் துணைகொண்டு செவ்விதாக ஆராய்தல் வேண்டும். நமக்கு முன்னர்ச் சமரசத்தை உண்டாக்கிய விழுமியோர்கள் அதனைப் பரவச் செய்தற்கு என்ன முறை கோலினர்கள் என்பதை நுண்ணிய அறிவு கொண்டு நோக்கவேண்டும்.

இவ்விதச் செவ்விய முறைகளை விடுத்துச் சமரசம் சமரசம் என்று 'ஊக்கடிப்பாக வாய்ப்பறை' யடிப்பதும், சமரசத்தை மக்களிடை யெழுப்புவோம் என்று அறநெறியாகிய செவ்விய முறையை விடுத்து மறத்துறைகளில் இறங்கிக் கலாம் விளைப்பதும் சமரசத்தை உண்டாக்குவனவாகா.

பயிற்சி

1. சமரசம் என்ற சொற்கு முடிந்த பொருள் யாது?
2. மக்கள் என்னுஞ் சொல்லால் குறிக்கப்படுபவர் யார்?
3. நிலங்கள் எத்தனை வகைப்படும்? என்னென்ன?
4. பண்டைக் காலத்தில் மக்கள் தங்களை எவ்வாறு பிரித்துக் கொண்டனர்? ஏன்?
5. தொல்காப்பியர், திருவள்ளுவர் காலங்களில் சமரசம் எவ்வாறு விளங்கியது?
6. மக்களிடம் சமரசத்தைப் பரப்புவதற்குத் துணை புரிவதாய உண்மை நெறியைக் காட்டிச் சென்ற பெரியார்கள் யாவர்?
7. சீர்திருத்தக்காரர்கள் என்போர் சமரசத்தைப் பரவச் செய்ய யாது செய்யவேண்டும்?
8. எவை சமரசத்தை உண்டாக்குவனவாகா?

3. வேதநாயகம் பிள்ளை

[ரா. பி. சேதுப்பிள்ளை, பி. ஏ., பி. எல்.]

தமிழ் நாட்டிலே தோன்றிய நல்லியற் கவிஞருள் ஒருவர் வேதநாயகர். அவர், நகைச்சுவை நிரம்பிய நூல்களால் தமிழ் மொழியை அழகு செய்தவர்; இசைத்தமிழின் பெருமையைக் கீர்த்தனங்களால் நாட்டியவர்; தமிழில் நாவல் என்னும் நவீனக் கதை இயற்றுவார்க்கு நல்வழி காட்டியவர்.

அத்தகைய வித்தகர், திரிசிராப்பள்ளிக்கு அண்மையில் உள்ள குளத்தூரிலே பிறந்தார். அவர் பிறந்த குலமும், பெற்ற நலமும் ஒரு சிறப்புப்பாயிரத்தால் விளங்கும். "கொங்குராய கோத்திரம் அதனில், வந்தவதரித்த செந்தமிழ்க் குரிசில்" என்று அவரைப் பாராட்டினார் மகாவித்துவான், மீனாட்சி சுந்தரம் பிள்ளை.

இளமையிலேயே வேதநாயகரிடம் விளங்கிய ஆங்கிலப் பயிற்சியையும், ஆன்ற பண்பினையும் அறிந்த அரசியலாளர் அவரை ஜில்லாக்கோர்ட்டில் மொழிபெயர்ப்பாளராக அமைத்தனர். அப்பணியில் அவர் காட்டிய திறமை துரைத்தனத்தாரது கருத்தைக் கவர்ந்தது; அதன் பயனாகத் தரங்கம் பாடியில் முனிசிபாக நியமிக்கப் பெற்றார். அப்பணியை ஏற்று நீதி பரிபாலனம் செய்யுங்கால் உற்றார் என்றும், மற்றார் என்றும் அவர் உணர்ந்ததில்லை; கீழோர் என்றும், மேலோர் என்றும் கருதியதில்லை; இச்சகம் பேசும் கொச்சை மக்களுக்கு இடம் கொடுத்ததில்லை; வழக்கின் தன்மையை உள்ளவாறுணர்ந்து தீர்ப்புச்செய்வதே அவர் வழக்கம். இத்தன்மை வாய்ந்த வேதநாயகரை நீதிமான் என்று எல்லோரும் புகழ்வாராயினர்.

தரங்கம்பாடியிலிருந்து வேதநாயகர் சீகாழிக்கு முனிசிபாக மாற்றப்பட்டார். அப்போது, 'நற்றாமரைக் கயத்தில் நல்லன்னம் சேர்ந்தாற் போல்' மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அங்குப்போந்து சிலகாலம் தங்கி இருந்தார். உணர்ச்சிபொருந்த அறிஞர் இருவரும் சிலநாளில் சிறந்த நண்பர் ஆயினர். அவ்வூர்ப் பெரியோர் விரும்பிய வண்ணம் மகாவித்துவான், சீகாழிக் கோவை என்னும் பிரபந்தம் இயற்றினார். அக்கோவை, சீகாழிச்

சிவன் கோயிலில் உள்ள வலம்புரி மண்டபத்தில் வாசித்து அரங்கேற்றப்பட்டது. வேதநாயகர், நாள்தோறும் வந்து கேட்டு இன்புற்று அக்கோவையின் நயங்களையும், பிள்ளையவர்களின் புலமைத்திறத்தையும் பாராட்டிப் பலகவிகள் பாடினர்.

நன்னெறியில் நாட்டம் உடைய வேதநாயகர், அவ்வப்போது தம் மனத்தில் அரும்பிய கருத்துக்களைப் பாட்டாகப் பாடி வைத்திருந்தார்; அப்பாடல்களை மகாவித்துவானிடம் படித்துக் காட்டி அவர் அளித்த சிறப்புப்பாயிரத்தோடு நீதிநூல் என்னும் பெயரால் வெளியிட்டார். அந்நூலில் வேதநாயகர் பரோபகாரம் முதலிய அறங்களைப் பாராட்டுகின்றார்; பஞ்சமா பாதகங்களைக் கடிந்துரைக்கின்றார்; பரிதானம் பெறுவோரையும், பற்றுள்ளம் உடையோரையும் பரிகசிக்கின்றார். நல்லரசின் தன்மையையும், வல்லரசின் தன்மையையும் அவர் நீதிநூலில் விளக்கிக்காட்டும் பான்மை நன்கு அறியத்தக்கதாகும். "நன்னெறி வழுவாத மன்னர்க்கு நாடெல்லாம் அரண்மனை; மன்னுயிர் எல்லாம் அவர் நற்படை; அன்னார் மனமெல்லாம் அவர் வீற்றிருக்கும் அரியாசனம். ஆனால், கொடுங்கோல் மன்னர்க்குக் குடிகளே பகைவர்; அவர் அடிவைக்கும் இடமெல்லாம் படுகுழி; மாளிகையே மயானம்" என்னும் பொருள்பட வேதநாயகர் பாடியுள்ளார்.

சீகாழியில் வாழ்ந்த காலத்தில் வேதநாயகர் இசைப் பாட்டிலே விருப்பம் உற்றார். தென்னாட்டு இசைத்தமிழின் வரலாற்றில் சிறந்ததோர் இடம்பெற்று விளங்குவது சீகாழிப்பதியாகும். "நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞான சம்பந்தர்" பிறந்த ஊர் சீகாழியே. கம்பர் அருளிய இராமாயணத்தை அழகிய கீர்த்தனங்களாகப் பாடி அழியாப்புகழ் பெற்ற அருணாசலக் கவிராயர் வாழ்ந்ததும் அப்பதியே. தில்லை மன்றத்தில் திருநடம் புரியும் இறைவனைத் தெள்ளிய பாட்டாற் போற்றிய முத்துத் தாண்டவரை ஈன்றதும் அவ்வூரே. இத்தகைய சீகாழியின் மருங்கேயமைந்த ஊர்களும் இசை மணம் வாய்ந்தனவாகும். "பண்ணோடு இசைபாடும் அடியார்க்கு இம்மையின்பமும், மறுமை இன்பமும் தரும் மணிகண்டன் மருவும் இடம்" என்று திருஞான சம்பந்தர், போற்றிப்புகழ்ந்த புள்ளிருக்கு வேளூர் சீகாழிக்கு அண்மையில் அமைந்துள்ளது. இன்னும் நற்றமிழ்ப்

பாடல்களை ஒற்றுத்துப் பாடும் வண்ணம் திருஞான சம்பந்தருக்கு ஈசன் பொற்றாளம் ஈந்தருளிய கோலக்காவும், சீகாழியை அடுத்துள்ள சிவப்பதியாகும்.

இத்தகைய சீகாழியிலிருந்து மாயூரத்திற்கு முனிசீபாக மாற்றப்பட்டார் வேதநாயகர். பழம் நழுவிப் பாலில் விழுந்தாற் போல இசைப்பாட்டில் ஆசையுற்றிருந்த வேதநாயகருக்கு மாயூரத்தில் சிறந்த இசைவாணர் பழக்கம் ஏற்பட்டது. 'நந்தனர் கீர்த்தனம்' பாடிப் புகழ்பெற்ற கோபால கிருஷ்ண பாரதியார் அப்போது அவ்வூரில் இருந்தார். அவர் பாடிய கீர்த்தனம் வேதநாயகர் உள்ளத்தைக் கவர்ந்தது. இசைப்பாட்டில் ஈடுபட்ட இருவரும் நாளடைவில் நண்பராயினர்.

மாயூரத்தில் வேதநாயகர் நீதிபதியாக இருந்தபோது வல் வழக்குகள் நீதிமன்றத்திலே வரக்கண்டு மனம் வருந்தினர். அவ்வழக்குகளின் தன்மைக்கு அவரே ஒரு சான்று காட்டியுள்ளார். "கரமிலான் ஒருவன் வாதியைப் பிடித்தான்; காலிலான் அவனை உதைத்தான்; வாயிலான் அவனைக் கடித்தான்;" இப்படிப் பிடித்து, உதைத்து, கடித்தவர்கள் மீது வாதி வழக்குத் தொடுத்தான். அவனுக்காக விறு விறுப்புடன் வாதாடி வம்பு செய்தார்கள் வக்கீல்கள். இவ்வாறு,

"தொண்டை கிழித்துக்கொண்டு
சண்டை செய்யும் வக்கீல்கள்
அண்டையிலே இருந்து நம்
மண்டையை உடைத்தால்—
ஆண்டவனை நினைப்ப தெப்போது நெஞ்சே
ஐயன் பதத்தை நினைப்ப தெப்போது நெஞ்சே"

என்று அவர் பாடினர்.

தெய்வ சாட்சியாக நீதி பரிபாலனம் செய்து வேதநாயகர் அடைந்த பெரும்புகழைக் கண்டு பொறாமை கொண்ட சிறியோர் சிலர், மேலதிகாரிகளிடம் கோளும், பொய்யும் சொல்லிக் குழப்பம் விளைவித்தார்கள். அன்னர் சிறுமையை ஒரு பாட்டாகப் பாடி ஆண்டவனிடம் முறையிட்டார் வேதநாயகர். "நல்லவர்களெல்லாம் நாட்டை விட்டு அகன்றார்; ஞான குணியரெல்லாம் நமக்கு அதிபதி என்றார்; ஆகாத காலம் இது; அசடர் தலையெடுத்தார்

பூவிற்ற கடையிலே புல்விற்கத் தொடங்கி விட்டார்; என்ன வந் தாலும் மனமே, ஐயன் இருக்கையில் என்ன விசனமே" என்னும் கீர்த்தனம் பாடிக் கவலையற்றிருந்தார். இறுதியில் அறம் வென் றது; அழுக்காறு வேரற்று வீழ்ந்தது.

அப்பொழுது தஞ்சை நாட்டில் கடும் பஞ்சம் வந்துற்றது. அதன் கொடுமையைக் கண்ட வேதநாயகர் நெஞ்சுருகிப் பாடினார். "ஐயோ! மண்ணில் அநேகர் என் கண் முன்னே மாய்ந்தார்; எண்ணிறந்தவர் சருகுபோல் காய்ந்தார்; கண்ணிருண்டு களைத்து உடல் ஓய்ந்தார்; ஆண்டவனே உன்னையன்றி யாரே துணை யாவார்" என்று முறையிட்டார்; ஒல்லும்வகையால் பசியின் கொடுமையைத் தணிப்பதற்குத் தம் செல்வத்தையும், செல்வாக் கையும் செலவிட்டு மாயூர நகரின் பலபாகங்களில் கஞ்சிச் சாலை கள் அமைத்தார். அங்கு வார்த்த கஞ்சியைப்பருகி மனங் குளிர்ந்து அவரை வாயார வாழ்த்திய ஏழை மாந்தர் பல்லாயிர வர். அவ்வறப் பணியைக் கண் குளிரக் கண்ட கோபால கிருஷ்ண பாரதியார், வேதநாயகரை வியந்து 'நீயே புருஷமேரு' எனத் தொடங்கும் கீர்த்தனம் பாடினார். பாரதியார் இயற்றிய கீர்த்தனங்களுள் இது வொன்றே நரஸ்துதி என்றால் வேதநாயகர் பெருமைக்கு வேறு சான்றும் வேண்டுமோ?

அக்காலத்தில் மாயூரத்துக்கு அண்மையிலுள்ள திருவாவடு துறை ஆதீனத்தில் சுப்பிரமணிய தேசிகர் என்னும் சீலர் தலை வராக விளங்கினார். கற்றவரும், பொருள் அற்றவரும் அவர் ஆத ரவை நிரம்பப் பெற்றனர். கலையின் கோயிலாகவும், கருணையின் நிலயமாகவும் திகழ்ந்த தேசிக மூர்த்தியிடம் வேதநாயகர் மிகவும் ஈடுபட்டார்.

"ஏனென்று கேட்பவர் இல்லாத் தமிழை இனிதளிக்க
நானென்று கங்கணம் கட்டிக்கொண் டாய்இந்த நானி லத்தே"

என்று அப்பெரியாரைப் பாராட்டினார்.

பஞ்ச காலத்தில் அத் தேசிகமூர்த்தி பசித்தோர் முகம் பார்த்துப் பரிவுடன் உணவளித்தார். இவ்வாறு வருந்தி வந்த வர் அரும்பசி தீர்த்து 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்

நோரே' என்னும் வாசகத்தை மெய்ப்பித்த பெரியாரை வேத நாயகர் மனமாரப்போற்றினர்.

கிறிஸ்துவ மதத்தில் வேதநாயகர் சிறந்த பற்றுடையவர் ஆயினும் தெய்வத்தின் பெயரால் சமயவாதிகள் சண்டை யிட்டுக் கொள்ளுதல் தவறு என்பது அவர் கொள்கை. பாரத நாட்டி லுள்ள பல சமயவாதிகளும் சமரச உணர்ச்சியோடு பணி செய்தல் வேண்டும் என்பது அவர் ஆசை. இக்கருத்துக்கொண்டு அவர் பாடிய கீர்த்தனங்கள் பலவாகும்; அவற்றைத் தொகுத்துச் சர்வ சமய சமரச கீர்த்தனம்' என்னும் பெயரால் வெளியிட் டார்.

பிற சமயத்தாருடன் வேதநாயகர் வேற்றுமை யின்றிப் பழ கினர். சைவ சமயத்தைப் போற்றி வளர்ப்பதற்காகத் தோன்றிய வரும் திருவாவடுதுறை ஆதீன மகாவித்துவானும் ஆகிய மீனாட்சி சுந்தரம் பிள்ளை வேதநாயகரின் ஆருயிர் நண்பர். வேதநாயக ரைப் பாட்டுடைத் தலைவனாக அமைத்து அம்மகா வித்துவான் ஒரு கோவை பாடினர். குளத்தூர் வேதநாயகர்மீது பாடப் பட்ட கோவையாதலால் அது 'குளத்தூர்க்கோவை' என்று வழங்குகின்றது. அக்கோவையில், தன்னேரிலாத தமிழ் வேத நாயகன்' என்றும், 'நூல் ஆய கோற்ற மதிவேத நாயகன் என்றும் அவர் பெருமையை மகாவித்துவான் பாடியுள் ளார்.

தமிழ் நாட்டுப் பெண்களின் முன்னேற்றத்தில் மிகுந்த ஆர்வ முடையவர் வேதநாயகர். நல்ல எண்ணங்கள் இளமையிலே நங்கையர் மனத்திற் பதிதல் வேண்டும் என்பது அவர் கொள்கை. அக்கருத்துக் கொண்டு எழுந்தது, 'பெண்மதி மாலை' என்னும் நூல். வேதநாயகர் தம் பெண்குழந்தைகள் படிப்பதற்காக அதனை எழுதினர் என்று தெரிகின்றது. பிறந்த மனையிலும், புகுந்த மனையிலும் பெண்கள் சோம்பலின்றி வேலை செய்தல் வேண்டும் என்றும், வாழ்க்கைப்பட்ட பெண் இல்லாள் என்று சொல்லப்படுவதால் அவளே வீட்டுக்கு அதிபதி என்றும், இல் லறம் நடத்தும் பெண்கள் நாடோறும் அறஞ் செய்தல் வேண்டு

மென்றும், மாதா, பிதா, குரு, தெய்வம் இவர்களிடம் அன்பும், பணிவும் உடையவர்களாய் இருத்தல் வேண்டும் என்றும் பெண் மதி மாலை கூறுகின்றது.

பெண்களுக்குக் கல்வி இன்றியமையாதது என்பதைப் பல கட்டுரைகளாலும் எடுத்துரைத்தார் வேதநாயகர். பெண் கல்வி, பெண்மானம் முதலிய கட்டுரைகள் பெண்மதி மாலையிற் சேர்க்கப் பட்டுள்ளன. பெண்களை மரியாதையாக நடத்த வேண்டும் என்பதற்குள்ள நியாயங்களைப் பெண்மானம் என்னும் வியாசம் விளக்குகின்றது.

வேதநாயகர் வசன நூல்களும் சில இயற்றினர். அவற்றுள் தலைசிறந்தது, 'பிரதாப முதலியார் சரித்திரம்' என்னும் கற்பனைக் கதையே யாகும். அதுவே தமிழில் எழுந்த முதல் நவீனக் கதை (நாவல்) என்று சொல்லப்படுகின்றது. பிரதாபன் கதை நகைச்சுவை நிரம்பியது; படிப்போர் மனத்தைப்பற்றி இழுத்துச் செல்லும் பண்புடையது; மூடப்பழக்க வழக்கங்களை ஒழிப்பது; நல்ல பழக்கங்கள் பரவ வழி காட்டுவது; கதா நாயகனாகிய பிரதாபனது கள்ளங்கபடமற்ற உள்ளம், நம் கருத்தை அள்ளுகின்றது. அவன் தாயாகிய சுந்தரமும், மனையாளாகிய ஞானம்பாளும் மதிநலம் வாய்ந்த மங்கையர் குலத்திற்கு அணிகலன்களாக விளங்குகின்றார்கள். சுருங்கச் சொல்லின் அந்நவீனம் கல்லார்க்கும், கற்றவர்க்கும் களிப்பருளும் கதையாகும். அக்கதை ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப்பட் டிருப்பதாகத் தெரிகின்றது.

பதினைந்து ஆண்டுகள் வேதநாயகர் முனிசிபாக வேலை பார்த்தார்; அவ்வேலையின் கடுமையால் உடல் தளர்ந்தார்; அரசியலார் அனுமதி பெற்று வேலையினின்று விலகினர்; தமிழ்க்கலைகளிலே பொழுது போக்கினர்; மாயூரம் நகரசபைத் தலைவராக அமர்ந்து நற்பணிகள் பல செய்தார்; 'ஞானசுந்தரி' என்னும் நாவலும் இயற்றி வெளியிட்டார்; கடைசியாக "சத்திய வேத கீர்த்தனை" என்னும் இசைப்பாட்டியற்றி அறுபத்தைந்தாம் வயதில் ஆண்டவன் அருளிலே கலந்தார்.

பயிற்சி

1. வேதநாயகர் வெளியிட்ட நீதிநூலில் காணப்படும் பொருள்கள் யாவை?
2. சீகாழிப் பதியின் சிறப்புக்கள் யாவை?
3. வேதநாயகர் நீதி மன்றத்தில் வல்வழக்குகள் வரக்கண்டு வருந்தினர் என்பதனைச் சான்று காட்டி விளக்குக.
4. வேதநாயகர் அருளுள்ளம் படைத்தவர் என்பதற்கு ஆதாரம் யாது?
5. சுப்பிரமணிய தேசிகரை வேதநாயகர் பாராட்டிய விதம் யாது?
6. மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் வேதநாயகரைப் போற்றிய விதம் யாது?
7. "பெண்மதி மாலை" என்ற நூல் கூறும் பொருள்கள் யாவை?
8. அவர் இயற்றிய வசன நூல்களுள் தலைசிறந்தது எது? அதன் சிறப்பு யாது?
9. வேதநாயகரின் நற்பண்புகளைத் தொகுத்து எழுதுக.

4. சிறுகதைகள்

[திரு. A. S. பஞ்சாபகேசஐயர் அவர்கள், M. A., I. C. S.]

1. நல்ல கோவில்

'நல்ல கோவில் எது?' என்பதைக் குறித்து மூன்று பண்டிதர்களிடையே வாக்குவாதம் உண்டாயிற்று. 'சிற்ப வேலைகள் நிரம்பிய கோவில் மேலானதா? கல்லையே குடைந்து செதுக்கப் பட்டிருக்கும் கோவில் மேலானதா?' என்று அவர்கள் ஆராய்ச்சி செய்யத் தொடங்கினார்கள். அவர்களுள் அபிப்பிராய பேதம் ஏற்பட்டது. முதல் முதலாகப் பேசியவர், மதுரைக் கோவிலைப் போன்ற சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்த கோவிலே மேலான தென்று எடுத்துச் சொன்னார். 'என்ன அழகான வேலைப்பாடு! எவ்வளவு அழகிய சித்திரங்கள்! எவ்வளவு பெரிய மண்டபங்கள்! கண்ணைப் பறிக்கும் ஆயிரக்கணக்கான சம்பவங்கள்! அந்தக் கோவிலைக் கண்டு பக்த கோடிகள் பரவசமடைந்து விடுகிறார்கள்,' என்று அவர் அடுக்கிச் சொல்லிக்கொண்டே போனார். குகைக் கோவில்களைச் சிலாகித்துப் பேசியவர் அமரநாத்துக் கோவிலின் சிறப்பைப் பற்றி விரிவாகக் கூறினார். 'ஒரு வருஷத்தில் பதினொரு மாதங்கள் பனியிலே உறைந்து கிடக்கும் அந்தக் கோவிலின் மகிமையை என்னவென்று சொல்வது! கடவுளின் அபாரசக்தியைப் புகழ்ந்து பேசிப் பல்லாயிரக் கணக்கான பக்தர் அவரைக் கண்டு தரிசித்து ஆனந்தமடைகின்றனர்; அந்தக் கோவிலை அதிகச் சிரமப்பட்டு அடைகின்றனர்; அந்தக் கோவிலின் சிறப்பை எடுத்துக் கூறுதல் அசாத்தியமான காரியம்' என்று அவர் சொல்லிக் கொண்டார்.

மூன்றும் பண்டிதரோ, குகையில் கல்லிலேயே செதுக்கப் பட்டிருக்கும் எல்லோராக் கோவில்களின் மேன்மையைக் குறித்துப் பேசினார். 'எல்லோராவிலிருக்கும் கைலாசநாதர் கோவிலைப் போல வேறு எந்தக் கோவிலும் இராது. அதற்குச் சரியாக வேறு எந்தக் கோவிலையும் சொல்வதற்கில்லை. ஓங்கி வளர்ந்திருக்கும் பாறையிலே அக்கோவில் செதுக்கப்பட்டிருக்கிறது. கல்லைக் குடைய வேலைக்காரர்கள் எவ்வளவு சிரமப்பட்டிருக்க வேண்டும்! பார்க்கப்பார்க்கக் கடவுளிடம் மக்களுக்கிருக்கும் அபார பக்தியையும், அதனால் மக்களுக்கு உண்டாகும் உற்சாகத்தையும் அந்தக் கோவில் வெளிப்படையாகக் காட்டுகிறது,' என்று அவர் சொன்னார்.

ஒவ்வொருவரும் தாம் சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருந்ததனால், அவர்கள் வாக்குவாதம் தீர்ந்த பாடில்லை. ஆகவே, அவர்கள் ஒரு முனிவரிடம் சென்று, தங்கள் சந்தேகத்தைத் தீர்த்து வைக்கும்படி கேட்டுக்கொண்டார்கள்.

மூன்று கோவில்களும் பெரிய கோவில்களே. ஆனால் அவை மூன்றும் நல்ல கோவில்களென்று சொல்வதற்கில்லை. ஜீவன்களிடம் காணப்படும் ஆத்துமாவைப் போன்று சிறந்த கோவிலே இல்லை. அதனுள்ளிருக்கும் பரஞ்சோதியாகிய தெய்வமே சிலாக்கியமானது. 'அதுவே ஒப்புயர் வில்லாத தெய்வம்,' என்று அம்முனிவர் உபதேசம் செய்தார்.

'நீங்கள் கூறும் கோவில் செலவில்லாமல் கட்டப்பட்ட கோவில். ஆனால், நாங்கள் சிலாகித்துப் பேசிய கோவில்களோ, பலர் கஷ்டப்பட்டு, அதிகச் செலவு செய்து கட்டப்பட்டவை. கட்டுவதற்கு அவர்கள் பல வருஷங்கள் பாடுபட்டிருக்க வேண்டும். ஆகவே, அவை கட்டியவர்களின் பக்தியைக் காட்டு கின்றன. மனிதர்களுக்கும் பக்தியை உண்டு பண்ணும் பெரிய சாதனங்களாக அவை உபயோகப்படுகின்றன,' என்று அந்த மூன்று பண்டிதர்களும் சொன்னார்கள்.

சிரித்துக்கொண்டே அந்த முனிவர் பின்வருமாறு சொன் னார்: பக்தர்களுக்குக் கோவில் ஏற்பட்டதே யொழியக் கட்டுப வர்களுக்கு ஏற்பட்டதன்று. வெளிப்பகட்டாக அதிக திரவி யத்தைச் செலவு செய்து, கோவில்களினாலும், அவைகளுக்குள் ளிருக்கும் அழகமைந்த விக்கிரகங்களினாலும் ஒருவனுக்கு ஏற் படக்கூடிய தெய்வ நம்பிக்கையையும் பக்தியையும்விட அதிக தெய்வ நம்பிக்கையும் பக்தியும் இருந்தால்தான் கோவில்போன்ற சாதனங்கள் இல்லாமலே தெய்வ சொரூபத்தை யறிய முடியும். ஆகவே, கோவில்களைக் கட்டுபவனும், கோவில் பூஜை செய்யும் பக்தனும் ஒருவனாகவே இருந்தால் நல்ல பலனுண்டு. நான் கூறிய மனக்கோவிலைக் கட்டுபவனும், அதற்குள் கடவுளை வைத்துப் பிரார்த்தனை செய்பவனும் ஒருவனே. ஆதலால் ஆத்துமா என்னும் கோவிலைவிடச் சிலாக்கியமான கோவில் இல்லை.'

2. கெட்டவன் நல்லவனாக முடியுமா?

இயற்கையின் படிப்பினை

'என் சுபாவத்தை மாற்ற முடியாது. நான் கெட்ட நடத்தையுள்ளவனாக இருந்தேன்; இப்போதும் கெட்ட நடத்தையுள்ளவனாக இருக்கிறேன். கெட்ட சகவாசத்தினால், எளிதில் நான் கெட்ட வழிகளில் இறங்கிவிடுகிறேன். இயற்கையிலேயே வழவழ கொழகொழ என்றிருப்பவர்கள், கண்டிப்பான நடத்தையுள்ளவர்களாக மாறுவது மிகவும் கஷ்டம்,' என்று கெட்ட நடத்தையுடைய ஒருவன், உபதேசம் செய்துகொண்டிருந்த ஒரு முனிவரிடம் சொன்னான்.

அவனை எப்படியாவது நல்ல வழியில் திருப்ப வேண்டுமென்று எண்ணிய அந்த முனிவர், பின்வருமாறு உபதேசம் செய்தார் :—

'சிறுசிறு களிமண் கட்டிகள், நாளடைவில் கற்களாய் மாறுகின்றன என்பதில் உனக்கு நம்பிக்கையில்லையா? ஆனால் மண்ணாங் கட்டிகள் கற்களாக மாறப் பல ஆயிரம் ஆண்டுகள் ஆகும். பகுத்தறிவுடன் கூடிய மனிதனால் மாறுதல் உண்டுபண்ண முடியாதென்பது நம்பத் தகுந்த விஷயமன்று. மிருதுவான களிமண்ணைக் கொண்டு குயவன் கெட்டியான சட்டிகளைச் செய்வதைக் கவனித்துப்பார். சாதாரணமான வஸ்துக்களைக் கொண்டு, மிகவும் உறுதியுள்ள சிமிட்டியைச் செய்கிறார்களல்லவா? அதே மாதிரி, விடாமுயற்சியுடன் வேலைசெய்து, சிதைந்து போயிருக்கும் உன் நல் நடத்தையை நம்பிக்கை என்னும் தண்ணீரின் உதவியினால் ஒன்று சேர்த்து, நேர்மை யென்னும் காறையைக்கொண்டு மறுபடியும் உடைந்து போகாவண்ணம் கட்டிவிடு. பிறகு எல்லாம் உனக்குக் கைகூடும். இனிமேல் தீய பழக்கங்களை ஒழித்து நல்ல பழக்கங்களையே கைக்கொள்.'

பயிற்சி

1. நல்ல கோவில் எது என்பதைப்பற்றி மூன்று பண்டிதர்களும் கொண்ட கருத்துக்கள் யாவை?
2. முனிவர் அம்மூவருக்கும் யாது உபதேசம் செய்தார்?
3. ஆத்துமா என்னும் கோவிலைவிடச் சிலாக்கியமான கோவில் இல்லை. ஏன்?
4. கெட்டவன் நல்லவனாக முடியும் என்பதற்கு முனிவர் கூறிய உவமை யாது?

5. படக்காட்சி

[வித்துவான், பாலூர் து. கண்ணப்ப முதலியார் P. O. L.]

நாகரிகம் நாளுக்குநாள் விருத்தியாகிக் கொண்டுவரும் இவ்வுலகில் பல புதுமைகள் தோன்றிக்கொண்டே வருகின்றன. இப்புதுமைகளுக்குக் காரணமாக இருப்பது இயற்கை மின்சார சக்தியே ஆகும். இதன் துணைகொண்டு எண்ணிப்பார்க்கவும் இயலாத புதுமைகளை மனிதன் செய்து முடிக்கின்றான். இப்படிப் பல புதுமைகளைக் கண்டுபிடிப்பதற்கு மனிதனது ஆற்றலும், அறிவும் துணை செய்கின்றன.

இங்ஙனம் நவ நவமான முறைகளைக் கண்டுபிடித்து உலகுக்குதவும் பெருமை மேனாட்டறிஞர்க்கே உரியது. அவர்கள் எப்பொழுதும் இயற்கைப் பொருள்களின் துணையால் என்னென்ன செய்து முடிக்க இயலுமோ அவற்றை யெல்லாம் செய்து முடிக்க ஊக்கமும், உணர்ச்சியும் மிக்கவர்களாய் முன் நிற்கின்றார்கள். கீழ்நாட்டினரோ எனில், மேனாட்டறிஞர்களைப் போல் உலக விஷயத்தில் புக மனம் இன்றி ஆன்ம விசாரணையில் தலையிட்டவராய், வைதிக விஷயத்திலும், பரலோக ஈடுபாட்டிலும் தம் அறிவைச் செலுத்தி வருகின்றனர். மேனாட்டார் வைதிக முறையில் தம் அறிவை முற்றிலும் செலுத்தாது இலெளகிக நாட்டமே மிக்கவராகப் பல புதுமைகளைக் காணபதிலேயே தம் அறிவைச் செலுத்தி வருகின்றனர். அப்புதுமைகள் பலவற்றுள் படக்காட்சியும் ஒன்று

இப் படக்காட்சி, இயங்கு படக்காட்சி, இயங்காப் படக்காட்சி, பேசும் படக்காட்சி, பேசாப் படக்காட்சி எனப் பல வகைப்படும்.

இயங்காத படக்காட்சி என்பது உருவங்களைக் கண்ணாடியில் எழுதியோ, அன்றிப் புகைப்படம் பிடித்தோ, விளக்கின் துணைகொண்டு திரையில் காட்டப்படும் காட்சி. இப்படிப் படங்களைக் காட்டும் கருவியைத் தான் மாஜிக்கு லேண்டர்ன் என்று கூறுவர். இக்கருவி 17-ஆம் நூற்றாண்டில் கிர்ச்சர் என்பவரால் கண்டு பிடிக்கப்பட்டது.

இயங்கு படக்காட்சி: இயங்கு படக் காட்சியைக் கண்டு பிடித்த பெருமை வாய்ந்த தாமஸ் ஆல்வா எடிசன் என்னும் பெரியாரின் உதவி பெரிதும் பாராட்டத்தக்கது. மாஜிக்கு

லெண்டர்ன் மூலமாகக் காட்டப்பட்ட படங்கள் அசைவற்று எழுத்தோவியமாகத் திகழ்ந்தன. இயங்கு படக்காட்சியில் இயற்கை உருவம், உள்ளது உள்ளவாறே இயங்கும் பான்மையில் படம் எடுக்கப்பட்டுக் காண்பிக்கப்பட்டு வருகின்றது.

பேசும் படக்காட்சி : இது பேசாப் படக்காட்சியின் சம்பந்தமும் உடையது. இதற்கு இயக்க விளக்கப் படங்காட்டும் கருவியும், ஒலிப்பதிவுக் கருவியும் வேண்டும். இவ்விரண்டின் துணை கொண்டே பேசும் படக் காட்சிகள் தோன்றியுள்ளன. முதல் முதலில் இயங்கும் படம் காட்டப்பட்டபோது இடையில் பாடல்களோ பேச்சோ வர நேரிட்டால், அவற்றிற் கேற்றவாறு பாடும் கருவியை இணைத்துப் பாடியும் பேசியும் காட்டிவந்தனர். இதனால் இயங்கு படக்காட்சியின் வேகமும், பாடும் கருவியின் வேகமும் ஒத்து வாராததினால் பல அசௌகரியங்கள் நேர்ந்தமையின் இரண்டும் ஒரே சந்தர்ப்பத்தில் ஒத்து நடக்கவேண்டுமென்று ஒலிப்படக் கருவி முறையைக் கண்டு பிடித்து, வெற்றிபெற்று அம்முறைப்படியே இப்பொழுது பேசும் படங்கள் எல்லாம் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

இங்ஙனம் மின்சாரத் துணைகொண்டு எத்தகைய படங்களையும் எடுத்துவிடலாம். எரிமலை, கடல், நீர்வீழ்ச்சி போன்ற இயற்கைக் காட்சிகளையும், சரித்திர சம்பந்தமான கதைகளையும், பெரியோர்களின் வரலாறுகளையும் நடிகர்களின் துணைகொண்டு படமாகத் தயாரித்து விடலாம். ஒரு படம் தயாரிக்கப்பட வேண்டுமானல், அதற்கு ஏராளமான பொருள்வேண்டும். குதிரைப் பந்தயம், கிரிக்கட்டுப் பந்தயம், போர், அரசர் முடிசூட்டுவிழா முதலியவற்றைப் படம் பிடிக்க வேண்டுமானல், அவ்வச் சம்பவங்கள் நடக்கும் இடங்களுக்குச் சென்று பிடிக்கவேண்டும். சரித்திர சம்பந்தமான நாடகப்படம் பிடிக்க வேண்டின், நடிகர்களும், கதைப்பகுதியும், கதைக்கேற்ற ஆடை அணிகளும், இயற்கைக் காட்சிகளும் தயாரிக்கப்பட வேண்டும். நடிகர்கள் ஒன்று சேர்ந்து நடிப்பதற்கு ஒரு பெரிய தனியிடம் வேண்டும். அத்தனி இடம், சாதாரணக் கொட்டகையைப் போன்றிராமல், சாஸ்திர முறைப்படி கட்டப்படவேண்டும். பேசும்படம் பிடிக்கப் படவேண்டுமானல், நடிகர் நடிக்குமிடத்தில் வெளிச்சத்தம் உள்ளே வரவொட்டாதபடி செய்து கொள்ளவேண்டும்.

ஏனெனில், சிறு சத்தம் வெளியிலிருந்து கேட்கப்படுமாலுைம், அவ்வொலியும் அப்படத்திற் பதிந்து, இடையிடையே அநாவசிய மான சத்தங்கள் படம் காண்பிக்கப் படும்போது கேட்கும். ஆகவே, நடிகர்களும் படம் எடுக்கும் இடத்தில் இருக்கும்போது தும்முதல், இருமுதல், கனைத்தல் முதலிய சத்தங்களைச் செய்யா மல் இருக்கவேண்டும். அப்படிச் சத்தம் செய்யின் அச் சத்தமும் அப்படத்தில் பதிந்துவிடும்.

இந்த முறைகளை யெல்லாம் கவனித்துப் படம்பிடித்த பிறகு அவை தொடர்ச்சி கெடாமல் இணைக்கப்பட்டு, 'பிலிம்' என்னும் பெயர் பெறும். ஒரு பிலிம் எடுக்கப்பட்டால் அதனின்று பல பிரதிகளை எடுத்துக்கொள்ளலாம். இவ்வாறு நூலம் இருப்பதனாலே தான் ஒரே கதை பல இடங்களில் ஒரே சந்தர்ப்பத்தில் காண்பிக் கப் படுகிறது.

இங்ஙனம் பிலிமாக எடுக்கப்பட்ட படம் புரொஜெக்டர் என் னும் கருவியின் மூலம் மிகுதியும் வெளிச்சமுடைய மின்சார விளக்கின் உதவியால் வெண்திரையில் காண்பிக்கப்படுகிறது. அமெரிக்காவில் மேற்சொன்ன முறைகளையெல்லாம் அநுசரித்து அதிகமாகப் படங்கள் பிடிக்கப்படுகின்றன. அம்முறைகளை நன்கு அறிந்து நம் இந்தியாவிலும் கல்கத்தா, பம்பாய், சென்னை முதலிய இடங்களில் படம் பிடிக்கப்படும் நிலையங்கள் அமைத்துப் பல பிலிம்களைத் தயாரிக்கின்றனர்.

படக் காட்சிகளைப் பார்ப்பதனால் பல நன்மைகள் உண்டா கின்றன. காணமுடியாத பல இடங்களை நேரில் காண்பதுபோலக் காண்கிறோம். இலண்டன் நகரில் ஓர் அபூர்வ சம்பவம் நிகழ்ந் தால் அதனை நேரில் கண்டு களிக்கும் பாக்கியம் தனவந்தர் களுக்கே வாய்க்கும். ஆனால், ஏழை எளியவர்களும் அந்தச் சம் பவங்களை நேரில் காண்பது போலப் படத்தில் காணலாம். இப் படக் காட்சி, கல்வி அபிவிருத்தி செய்வதற்குப் பலவழிகளிலும் பயன்படுகிறது.

மாணவர்கள், தாங்கள் படிக்கும் பூகோள பாடம், சரித்திர பாடம் முதலிய பாட சம்பந்தமாக இயற்கைக் காட்சிகளையும், அழகிய கட்டடங்களையும் படத்தில் கண்டு களிக்கலாம் முன்னே நடந்த வாழ்க்கை வரலாறுகளும் படமாகப் பிடிக்கப்பட்டுக்

காண்பிக்கப்படுவதனால் படித்துத் தெரிந்துகொள்ள வேண்டியவை களையும்படிக்காதவர்களும் படக்காட்சியின் மூலம் நன்கு அறிந்து கொள்வார்கள். தற்காலத்தில் மூலைமுடுக்குகளில் எல்லாம் படம் பிடித்துக் காண்பிக்கப்பட்டு வருவதால் ஆண்களும், பெண்களும் எத்தனையோ விஷயங்களை அறிந்துள்ளார்கள் என்பது யாவரும் அறிந்ததே.

இவ்வளவு நன்மைகள் இருப்பினும் படக் காட்சியினால் சில தீமைகளும் ஏற்படுகின்றன. பார்க்கத் தகாத சில சினிமாக் காட்சியினால் மாந்தர் ஒழுக்கம் கெடுகிறது. இளைஞர்கள் இளமை யிலேயே கெட்டு ஒழிகின்றார்கள். படக் காட்சிகளைக் காண மக்கள் பெருங்கூட்டமாக வந்து எல்லோரும் ஒரு கட்டடத்திற் குள் புகுந்து பார்க்க நேரிடுகின்றமையின், சுகாதாரத்திற்குப் பிரதிகூலமாகிறது. அடிக்கடி படக்காட்சி பார்ப்பதனால் வெகு சீக்கிரத்தில் கண் பார்வை மங்குகிறது. ஆயினும், படக் காட்சியில் பின்னுஞ்சில அரிய சீர்திருத்தங்கள் செய்யப்படுமானால் இக்குறை கள் ஒருவாறு நீங்குதலும் கூடும்.

பயிற்சி

1. மேனாட்டறிஞர்கட்கும் கீழ்நாட்டினருக்கும் உள்ள வேறு பாடு யாது?
2. படக் காட்சி எத்தனை வகைப்படும்?
3. இயங்கு படக்காட்சியைக் கண்டுபிடித்தவர் யார்?
4. படக் காட்சிகளைப் பார்ப்பதனால் மாணவர்கட்கும் மற்ற வர்கட்கும் ஏற்படும் நன்மைகள் யாவை?
5. படக் காட்சியினால் ஏற்படும் தீமைகளையும் அவற்றைப் போக்குவதற்குரிய உபாயங்களையும் ஆராய்க.

6. இசை இன்பம்

[மகா மகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர்]

இசையினுடைய பெருமையை ஓர்ந்தே தமிழர் முத்தமிழுள் இசைத்தமிழை நடுநாயகமாக வைத்திருக்கின்றனர். இயற்றமிழாகிய இலக்கிய நூல்கள் செய்யுட்களாகியன்றன. அவை இசையுடனேயே பயிலப்பட வேண்டும். நாடகத்திற்கு இசை இன்றியமையாத தென்பதை யாவரும் அறிவர். இலக்கிய இலக்கணப் பயிற்சி, ஆங்கிலம், தெலுங்கு முதலிய பாஷைப் பயிற்சி முதலிய உடையாரால் அவ்வக்கலைகளில் அறிவுடையாரையே இன்புறுத்த முடியும். ஆனால், இசையோ, கற்றார், கல்லார், விலங்கினங்கள், பறவைகள் முதலிய எல்லா உயிர்க்கும் இன்பம் நல்கும். பண்டைத்தமிழ் இலக்கியங்களில் இருதிணை உயிர்களும் இசையின் வயப்பட்டு நின்றன வென்பது பல இடங்களிற் கூறப்பட்டுள்ளது.

காட்டிலுள்ள புஷ்பங்கள் மலரும் பருவத்தில் வண்டுகள் சென்று அவற்றிலிருந்து ஊதும். மலரும் பருவத்திலிருக்கும் பேரும்பு 'போது' என்று தமிழிற் கூறப்படும். காட்டிலுள்ள முனிவர் முதலியவரும் பிறரும் சிற்சில போதுகள் மலர்வதாற் காலத்தை யறிந்து வந்தனர். 'நள்ளிருள் நாறி' என்றொரு மலர் உண்டு. அது நடுயாமத்திற்றான் மலரும். சூரியன் மறைந்திருப்பினும் அவை மலர்தலாலும் குவிதலாலும் போதினைப் புலப்படுத்துதலின், போதெனப் பெயர் பெற்றன. அப்போதுகளில் வண்டுகள் இசைபாட, அவை மலரும்; "முல்லை, வரி வண்டூத வாய் நெகிழ்ந்தனவே," என்பது குறுந்தொகை. பாம்பு இசைக்கு அடங்கும் என்றும் கூறப்படுகின்றது. மதம்பிடித்து அலையும் யானைகளும் இசையினால் அடங்கிவிடும்; பரிக்கோல், குத்துக்கோல் முதலிய ஆயுதங்களாலும் அடக்க முடியாத ஒரு யானை, வீணை இசைக்கு அடங்கி விடுவது உவமானமாகக் "காழ் வரை நில்லாக் கடுங்களிற் றொருத்தல் யாழ்வரைத் தங்கியாங்கு" எனக் கலித்தொகை என்ற சங்கநூலிற் கூறப்பட்டிருக்கிறது. இன்னும் "அணியிழை மகளிரும் யானையும் வணக்கம் மணிபொலி வீணையும்," என்று பெருங்கதையிலும், "மகரயாழ் வல்ல மைந்த னொருவனைக் கண்ட மத்தப் புகர் முகக் களிற்

றின்," என்று மேரு மந்திர புராணத்திலும் சொல்லப்பட்டிருக்கின்றன. அகநானூற்றில் குறிஞ்சி நிலத்தில் தினைக்கொல்லையைக் காக்கும் ஒரு பெண் தெள்ளிய சுனையில் நீராடிப் பரண்மேல் நின்று இனிய காற்றில் தன் கூந்தலை ஆற்றிக்கொண்டு மிகுந்த களிப்புடன் அந்நிலத்துக்குரிய குறிஞ்சிப் பண்ணைப் பாடிக்கொண்டு நிற்கையில், தினைக்கதிரை யுண்பதற்காக அங்கே வந்த யானையொன்று அந்தப் பெண்ணின் இசையில் மயங்கிக் கதிரை யுண்ணுமல் தான் கொண்ட பெரும்பசியையும் மறந்து மயங்கி நின்றதாக ஒரு செய்தி காணப்படுகின்றது. இந்தக் காட்சியையே,

> " ஒலியல் வார்மயி ருளரினள் கொடிச்சி
> பெருவரை மருங்கிற் குறிஞ்சி பாடக்
> குரலுங் கொள்ளாது நிலையினும் பெயராது
> படாஅப் பைங்கண் பாடுபெற் ருய்யென
> மறம்புகன் மழகளி றுறங்கும் நாடன்"

என்ற அடிகள் காட்டுகின்றன.

உதயணன் சரித்திரமாகிய பெருங்கதையில், உதயணன் நளகிரி யென்ற மதம் பிடித்த யானையை வீணை வாசித்து அடக்கி, அதன்மேல் ஏறி ஆயுதங்களை அதையே எடுத்துத்தர ஏவி ஊர்ந்தானென்று ஒரு செய்தி காணப்படுகின்றது. இசையினுல் வணக்கப்பட்ட அந்த யானை உதயணனுக்கு அடங்கி நின்றதை ஆசிரியர் கூறுகையில், 'குருவினிடத்து மிகுந்த பக்தியுள்ள ஒரு சிஷ்யன் போல் யானை படிந்தது' என்னும் பொருள்பட, "வீணை கெழீஇ விதியினடப்ப, ஆணையாசாற் கடியுறை செய்யு, மாணி போல மதக்களிறு படிய" என்று பாடியுள்ளார். இதே நிகழ்ச்சியைக் கூறும் உதயண குமார காவியம் செய்தவர் இங்கே தந்தையைக் கண்டு வணங்கும் ஓர் உத்தம புத்திரனை உவமை காட்டுகிறுர்.

பசுக்கள் இசையின் வயப்படுகின்றன என்பதைக் கண்ணபிரானுர். கதை விளக்கும். பசுக்களைப் பல இடங்களிலும் மேயவிட்டு விளையாடிக்கொண்டிருந்த கண்ணபிரானுர், மாலைக் காலத்திற் பசுக்களை ஆயர்பாடிக்கு ஓட்டிச் செல்ல வேறு ஏதும் செய்வதில்லை; குழலை யெடுத்து ஊதுவார்; உடனே பல இடங்களிலும் நின்று மேய்ந்த பசுக்களெல்லாம் ஒருங்கே திரண்டு

அவர்பால் வந்து சேரும். இதனையே "ஆக்குவித்தார் குழலா லரங்கேசர்" என்று திவ்வியகவி ஒருவர் சுருக்கமாக விளக்குகின்றார். பெரியபுராணத்திற் கூறப்படும் நாயன்மார்களுள் ஆனாய நாயனாருடைய புராணத்தும் இத்தகைய செய்திகள் காணப்படுகின்றன.

அசுணமா என்றொரு விலங்குண்டு. அதைப் பறவை யென்பாருமுளர். அஃது இசையை யறிவதற் சிறந்தது; இனிய இசையைக் கேட்டுக் களிக்கும்; இன்னா விசையைக் கேட்டபின், மூர்ச்சையுற்று விழுந்துவிடும். அதன் தன்மையை, "இளஞ்சிறைத் தொழுதி யார்ப்ப யாழ்செத்து, இருங்கல் விடரளை யசுண மோர்க்கும்" என்ற அகநானூற் றடிகளாலும், "இன்னளிக் குரல் கேட்ட வசுணமா வன்னளாய் மகிழ் வெய்துவித்தாள்" என்று சிந்தாமணிப்பாடலாலும், 'யாழ், நறையடுத்த வசுணநன்மாச் செவிப் பறையடுத்தது போலும்" என்ற கம்பர் வாக்காலும் அறியலாம். அதனைப் பிடிக்க எண்ணியவர்கள் செடி மறைவிலிருந்து யாழ் வாசிப்பார்களென்றும், அதன் இசையைக் கேட்டு அருகுற்று அசுணம் களிக்குமென்றும், அப்பொழுது அதனைப் பிடித்துக் கொள்வார்களென்றும் தெரிகின்றது. அவர்கள் கை, முதலில் யாழின் இசையால் அசுணத்திற்கு இன்பத்தை விளைவித்துப் பின்பு அதன் உயிருக்கே அழிவு சூழ்வதை நற்றிணையில் உவமையாக எடுத்தாள்கையில், "அசுணம் கொல்பவர் கைபோனன்றும், இன்பமுந் துன்பமுந் முடைத்தே" என்று ஒரு நல்லிசைப் புலவர் பாடியிருக்கிறார்.

கின்னரப் பறவையும் இத்தன்மையதே. வண்டி மாடு, கபிலை ஏற்றக் காளைகள் முதலியவற்றை இயக்கும்போது தெம்மாங்கு முதலிய பாடல்களைப் பாடுவதையும், அவை களைக்கேட்டு அவ்விலங்குகள் தம் வேலையை வருத்தமின்றி அமைதியாகச் செய்து வருவதையும் இன்றும் காண்கிறோம். அந்தத் தெம்மாங்கு தேன்பாங்கு போலும்! குழந்தைகள் அன்னியரின் இனிய தாலாட்டிசையைக் கேட்டு அழுகை யோய்ந்து உறங்குவதை எவர் தாம் அறியார்?

வன்மனக் கள்வரும் தம் கொடுஞ்செயலை மறந்து இசை வயத்தராவர். பழைய நூலில் இத்தகைய செய்தியொன்று

காணப்படுகின்றது. பாலை நிலத்தில் ஆறலைக் கள்வர், வழி வருவோர் பொருளையும் உயிரையும் கவர்வர்; பொருளில்லை யெனினும் வாளால் வெட்டப்பட்ட உடம்பு துள்ளுவதைப் பார்த்தேனும் களிக்கக் கொலை செய்வர். அவர்முன் பொருநர் பாலைப் பண்ணைப் பாடினால், அக்கள்வர் தம் கையிலுள்ள ஆயு தங்களை நழுவவிட்டுத் தம் வன்றொழிலை மறந்து இன்புற்று, இசைக்கு உருகுவாராம். இதனையே, "ஆறலைக் கள்வர் படை விட அருளின், மாறுதலை பெயர்க்கு மருவின் பாலை" என்ற அடிகள் உணர்த்துகின்றன.

சீவக சிந்தாமணியின் கதாநாயகனான சீவகன், ஆண்களைப் பார்ப்பதுமில்லை யென்ற விரதத்துடன் இருந்த சுரமஞ்சரி என்ற பெண்ணின்பால் ஒரு பழுத்த கிழவன் வேடங்கொண்டு சென்று இசை பாடி, அவளை வசப்படுத்தினன். அவன் இசையைக் கேட்ட பெண்டிர் யாவரும் வேடன் பறவை போலக் கத்தும் ஓசையைக் கேட்டு மயங்கி ஒரே கூட்டமாக ஓடிவரும் மயிலினங் களைப்போல விரைந்து வந்தனர் என்று கவி அவ்விடத்தில் வருணிக்கிறார்.

"கள்ள மூப்பி னந்தணன் கனிந்த கீத வீதியே
வள்ளி வென்ற நுண்ணிடை மழைமலர்த் தடங்கணார்
புள்ளி னம்ம திம்மகன் புணர்த்த வோசை மேற்புகன்(று)
உள்ளம் வைத்த மாமயிற் குழாத்தி னோடி யெய்தினர்"

என்பது அந்தப் பாட்டு.

இசை பிறரைத் தன் வயப்படுத்தும் என்னும்போது என்னுடைய இளமைக் காலத்தில் நடந்த ஒரு விஷயம் ஞாபகத்துக்கு வருகிறது. என்னுடைய தமிழாசிரியராகிய திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களிடத்துச் சிறப்புப்பாயிரம் பெறப் பல புலவர்கள் முயற்சி செய்ததுண்டு. சிறந்த சங்கீத வித்துவானும் மகா சிவபக்தரும் ஆகிய கோபால கிருஷ்ண பாரதியாரவர்கள் தாம் இயற்றிய நந்தன் சரித்திரக் கீர்த்தனைத்திற்குச் சிறப்புப் பாயிரம் கொடுத்துதவுமாறு பிள்ளையவர்களை வேண்டினார்கள். அதில் பிழைகள் காணப் பட்டமையாற் "சிறப்புப்பாயிரம் தரமாட்டோம்," என்று பிள்ளையவர்கள் மறுத்து விட்டார்கள், மறுத்தும் பாரதியார்

முயன்றே வந்தார். ஒரு நாள் பிள்ளையவர்கள் உள்ளே படுத்திருக்கும்போது அவர்கள் வீட்டிற்கு வந்த பாரதியாரவர்கள், பிள்ளையவர்கள் நித்திரை செய்கிறார்கள் என்பதை யறிந்து, எழுப்புதல் கூடாதென்றெண்ணிப் புறத்தே யிருந்து, தமது நந்தன் சரித்திரக் கீர்த்தனையிலுள்ள "கனக சபாபதி தரிசனம் ஒரு நாள் கண்டாற் கலிதீரும்," என்ற கீர்த்தனையை இனிமையாக மெல்லப் பாடிக்கொண்டிருந்தார்கள். பிள்ளையவர்கள் விழித்துக்கொண்டு எழுந்து கீர்த்தனை முழுவதும் பாடும் வரையில் இருந்து கேட்டு, மனமுருகி, "இதற்குச் சிறப்புப் பாயிரம் கொடாமலிருப்பது முறையன்று," என்று உடனே வந்து சிறப்புப் பாயிரமொன்றை வழங்கினார்கள்.

ஈசுவரரே இசையின் வடிவமா யிருப்பவரென்றும், இசையிற் பிரியம் உடையவரென்றும் பெரியோர்கள் சொல்லியிருக்கின்றார்கள். "ஏழிசையா யிசைப்பயனாய்," "இயலவன் இசையவன்," "இயலிசைப் பொருள்களாகி," "ஏழிசையை" எனவரும் தேவாரப் பகுதிகள் சிவபெருமான் இசையுருவினரென்பதைத் தெரிவிக்கின்றன. இசையிலுள்ள விருப்பத்தினால் அசுவதரமும் இசையைக் கேட்டு ஆனந்திக்கும்பொருட்டு இசையில் வல்ல இரண்டு கந்தருவர்களைச் சிவபெருமான் காதிற் குழையாக வைத்தருளி யிருக்கின்றனரென்று நூல்கள் கூறும். "இசை விரும்பும் கூத்தனார்," என்பதும், இறைவருடைய இசைவிருப்பத்தை வெளியிடும். ஈசுவரர் கையில் வீணையை வைத்து அகத்தின்புறுவதாகப் பெரியோர் கூறுவர். "எம்மிறை வீணை வாசிக்குமே" என்பது தேவாரம். இத்தகைய மூர்த்தி 'வீணா தக்ஷிணாமூர்த்தி' என்று வழங்கப்படுபவர். கண்ணன் வேய்ங்குழலோடும் விளங்கி இசை பரப்பியதை அறியாதார் யார்? இத்தகைய இசையின் பெருமையையும் இன்பத்தையும் இன்னும் விரிக்கிற் பெருகும்.

பயிற்சி

1. முத்தமிழுள் இசையே சிறப்புடையது என்பதை விளக்குக.
2. பேரரும்புக்குப் போது என்ற பெயர் வரக்காரணம் என்ன?

3. தமிழ் இலக்கியங்களில் இசை இன்பம் என்பதுபற்றி 18 வரிகட்கு மிகாமல் கட்டுரை வரைக.

4. அசுணமாவின் இயல்பு யாது?

5. வன்மனக் கள்வரும் இசைவயப்பட்டால் தங்கொடுஞ் செயலை மறப்பர் என்பதனைச் சான்றுடன் விளக்குக.

6. மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் நந்தன் சரித்திரக் கீர்த்தனத்திற்குச் சிறப்புப்பாயிரம் வழங்கிய விதம் யாது?

7. சிவபிரான் இசையுருவினன் என்பதை சான்றுடன் விளக்குக.

7. மாணக்கர்

[வித்துவான் என். எஸ். டி. சர்மா]

மாணக்கர் என்றவுடனேயே, தனக்குரிய கட்டணத்தைச் செலுத்திவிட்டுக் கல்விக் கூடத்திற்குத் தினந்தோறும் சென்று வருவோர் யாவரையும் மாணக்கர் என்று கருத வேண்டாம். எதிர் காலத்திற்குரிய மாண்பினைத் தம்மிடம் ஆக்கும் முயற்சியில் ஈடுபடுவோரே மாணக்கராதற்குரியர். அந்நிலையில் இளம் பருவத்தைக் கடந்திருப்பினும் ஆசிரியர் போன்றோரும் மாணக்கர் என்பதற்கு உரியராவர்; இருப்பினும், பெரும்பாலும் வருங்கால உலகுக்குரிய மாண்பினைத் தம்மிடம் நலமுறச் செய்யும் பணியொன்றினையே குறிக்கோளாகக் கொண்டுள்ளமையாலும், அத்தகைய மாண்பினை ஆக்குவிக்கும் பயிற்சி கல்விக் கூடங்களிலேயுள்ள இளம்பருவத்தினரே பெறுவதாலும் கலைக்கோயிலுக்குச் சென்று வருவோரையெல்லாம் மாணக்கர் என்று கூறுகின்றோம்.

இனி அத்தகைய மாணக்கரை மூவகையினராகப் பிரிக்கலாம்.

பாலையும் நீரையும் சேர்த்து வைப்பின் நீரை விலக்கிப் பாலை மாத்திரம் பருகும் அன்னத்தையும், புல்கண்ட விடத்து வயிறார மேய்ந்து பின்னர்த் தனித்திருந்து அசைப்போட்டுச் சீரணிக்கச் செய்யும் பசுவையும் போன்றார் தலைமாணக்கர் எனப்படுவர்.

பாடுபட்ட அளவிற்றானே பயனளிக்கும் மண்ணையும், சொன்னதை யன்றிப் பிறிதொன்றையும் பேசவியலாக் கிள்ளையையும் போன்றார் இடையாய ரெனப்படுவர்.

நீரை வார்த்தால் கீழே ஒழுகவிடும் பொள்ளற் குடத்தையும், அமைதியுடன் ஓரிடத்திலுள்ள தமை முதலியவற்றை கிரம்ப மேயாது புதிய மேய்ச்சலை நாடும் ஆட்டையும், தெளிந்த நீரையும் கலங்கச் செய்து குடிக்கும் எருமையையும், தேன் முதலியவற்றைக் கீழேவிட்டு எறும்பு, ஈ முதலியவற்றைத் தன்னிடத்தே வைத்துக்கொள்ளும் பன்னாடையையும் போல்வார் கடையாய மாணக்கர் எனப்படுவர்.

மாணுக்கரும் உடற்பயிற்சியும்

சுவரை வைத்தன்றோ சித்திரம் தீட்டுதல் இயலும்; அது போன்றே உடல் நலனின்றி வாழ்பவர், தமக்கும் பயனின்றிப் பிறர்க்கும் பயனின்றி மண்ணுக்குச் சுமையாவர். அதனால், மானிடர் யாவரும் நீண்ட நாட்கள் வாழ்ந்திருந்து தமக்கும், தங் கிளைஞருக்கும், தம் நாட்டிற்கும் நற்றொண்டுகள் பல செய்வதற்கு உடல் வலிமையுடன் நோயற்றவர்களாகவும் வாழவேண்டு மென்பது கூறாமலே விளங்கும். அதற்கு இளமை முதற்கொண்டே உடற்பயிற்சி செய்தல் இன்றியமையாததாகும். மேலும் உடற் பயிற்சி செய்து வருவதால் உடல் வலியுறுதலோடு வனப்படை தலும் கண்கூடு. இவ்வுடற் பயிற்சிக்கு மாணுக்கர், கிரிக்கெட், உதைபந்து, ஆசனம் முதலியவற்றுள் அவரவர்க்கேற்ற வகையில் ஏதாவதொன்றைக் கைக்கொள்ளலாம்.

உளப் பயிற்சி

இவ்வாறு உடற்பயிற்சி செய்து உடல்நலம் பெற்றிருப்பினும் அவர் பூரண மக்கட்டன்மையைப் பெற்றவராகார். ஏனெனில் மக்களை மாக்களினின்றும் பிரிப்பது உளப்பயிற்சியே. அத்தகைய உளப்பயிற்சிக்குக் கல்வி இன்றியமையாச் சாதனமாகும். அக் கல்வியறிவைப் பெறப் பல நூல்களைக் கற்கவேண்டு மெனினும், "கண்டது கற்கப் பண்டிதனாவான்". என்று கூறிக்கொண்டு சார மற்ற நூல்களைக் கற்க முற்படுவது மடமையாகும். அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நால்வகை உறுதிப் பொருள்களைப் பயக் கும் நூல்களை மாணவர் கற்க வேண்டும். கல்வி கற்றல் என்பது இளம்பருவம் நீங்கிடில் பெரும்பாலோருக்கு முடியாத தொன் றாகும். அதுபற்றியே "இளமையிற் கல்" என்றனர் ஆன்றோர். ஆகவே கண்ணெனத் தகும் உறுதிப்பொருள் பயக்கும் கல்வியை இளமையிலேயே நன்கு கற்று அதற்குத்தக்க நிலையில் ஒழுகுதலே தலைமாணுக்கர் கடமையாகும்.

மாணவரிடை இருக்கவேண்டிய நற்பண்புகள்

இனி ஒருவன் உடல் நலன்பெற்றுக் கல்வி யறிவுள்ளவனாக இருந்தால் மாத்திரம் பயனின்று. நற்பண்பைப் பெற்றிருந்தா லன்றி அறிவுடையோனால் சமூகத்திற்குத் தீங்கே ஏற்படும். அத னால் மேழ்க்காணும் நல்லியல்புகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

கடவுட் பற்று

எத்தகைய வலிமை பெற்றிருப்பினும் யாங்கணும் நீக்கமற நிறைந்த பரம்பொருளின்றி ஓரணுவும் அசையாதென்பதை புணர்ந்து கடவுட் பற்றுடனிருந்து இம்மை மறுமைக்குரிய நலன்களை படைய முயல வேண்டும்.

தன்னலமின்மை; கூடா வொழுக்கம், யாவர்மாட்டும் அன்புடைமை, அடங்கி யிருத்தல் இத்தகைய பண்புகள் ஒருவனை மேன்மையடையச் செய்வன. கல்விக்கூடங்களில் ஏற்படுத்தப் பட்டுள்ள சாரணர்படை, செஞ்சிலுவைச் சங்கம் முதலியவற்றின் நோக்கம் இப்பண்புகளை மாணவரிடையே தோற்றுவித்தலே யாகும்.

அழுக்காறாமை வேண்டும். "அழுக்காறென ஒரு பாவி திருச் செற்றுத் தீயுழி உய்த்துவிடும்" என்ற குறள் உன்னற்பாலது. புறங்கூறி உயிர்வாழ்வதைக் காட்டிலும் இறந்து படுவதே சிறந்ததென்று வள்ளுவர் கடிந்துகொள்கிறார். அத்தகைய புறங் கூறுதல் இளமையிலேயே நீக்கற் பாலதாகும்.

சிவபிரான் தமது நெற்றிக் கண்ணைக் காட்டிய காலத்தும் உமது பாட்டிலுள்ள குற்றம் குற்றமே என்று நவின்ற நக்கீரர் வழியில் தோன்றிய தமிழ் மாணவர், அஞ்சாமை, குற்றங் கடிதல் முதலியவற்றைக் கொள்ளவேண்டும். மேலும் உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் இருப்பதற்குக் காரணமான வாய்மை என்னும் விளக்குகொண்டு வாழ்க்கையை வகுத்துக்கொள்ளப் பயிற்சி பெற்று, இடுக்கணுற்ற போதும் நகைமுகத்துடனிருந்து அதனை வென்று ஊழ்வினையையும் உப்பக்கங்காணும் மெய்ம் முயற்சி புடையராதல் வேண்டும்.

தாய்நாட்டன்பும் தாய்மொழிப் பற்றும்

உலகில் ஒவ்வொருவருக்கும் தாய்நாட்டன்பும் தாய்மொழிப் பற்றும் இன்றியமையாது வேண்டற்படுவன. தாய் நாட்டிற்காகத் தமதுயிரைத் துரும்பாக மதிக்கும் மக்களைப் பெற்ற தேயமே உரிமையிழந்து அடிமைத்தளையைப் பெறாதிருக்கும்.

பைந்தமிழ், இன்றமிழ், மென்றமிழ் என்றெல்லாம் போற்றப் படும் உயர்தனிச் செம்மொழியாம் நந்தண்டமிழைத் தாய்மொழி

யாகப் பெறும் பேறு பெறற்கரியதாகும். அத்தகைய தமிழ்த் தாயிடம் பற்றுளங்கொளாதிருத்தலைக் காட்டிலும் கொடிய இழி செயல் பிறிதொன்றும் கிடையாததாகும்.

ஆகவே இத்தகைய உயிரினும் சிறந்ததாய நல்லொழுக்கங்களைப் பெற்றுத் தங்கட்கும் நாட்டிற்கும் சமூகத்திற்கும் நற்றொண்டுகள் பலசெய்து நலமுற்றுப் புகழுடன் மாணுக்கர் வாழ்வாராக.

பயிற்சி

1. மாணுக்கர் யாவர்? ஆராய்க.
2. மாணுக்கர் எத்தனை வகையினர்? விளக்குக.
3. உடற்பயிற்சி இன்றியமையாதது என்பதை விளக்குக.
4. எத்தகைய நூல்களைக் கற்க வேண்டும்?
5. மாணவரிடை இருக்கவேண்டிய நற்பண்புகள் யாவை?
6. கல்விக் கூடங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள சாரணர் படை முதலியவற்றின் நோக்கங்கள் யாவை?
7. அழுக்காறுமை, புறங் கூறுமை இவற்றைப் பற்றித் திருவள்ளுவர் யாது கூறியுள்ளார்?

குறிப்புரை

I வாழ்த்துப் பகுதி

இதன் ஆசிரியர் நாமக்கல் திரு. இராமலிங்கம் பிள்ளை அவர்கள். இவர் கி. பி. 1888-இல் பிறந்தவர். இவர் தற்பொழுது சென்னை அரசவைக் கவிஞராக நியமிக்கப்பட்டிருக்கின்றார். இவர் தம் பெற்றோர் வேங்கடராமப் பிள்ளை — அம்மணி அம்மையார். பிறந்த ஊர் மோகனூர். இவர் பல தேசியப் பாடல்களையும் தமிழன் இதயம்போன்ற நூல்களையும் இயற்றியுள்ளார்.

(1) எண்ணமாளா - நினைப்பதற்கு இயலாத. அருவன் - உருவமற்றவன். சலம் - குற்றம். மலரின்மேல் தேவன் - படைப்புக் கடவுளாகிய பிரமன்.

2. சகல கலாவல்லி மாலை

ஆசிரியர் குமரகுருபர சுவாமிகள், காலம் - சுமார் முந்நூறு ஆண்டுகளுக்கு முற்பட்டவர். பெற்றோர் - சண்முகசிகாமணிக் கவிராயர் - சிவகாமி அம்மையார். ஊர் - ஸ்ரீவைகுண்டம். ஞானாசிரியர் மாசிலாமணி தேசிகர். சமயம் - சைவ சமயம். திருச்செந்தூர் முருகப்பிரான் அருளால் ஐந்து வயதிற்குப் பிறகு பேசும் திறன் வாய்க்கப்பெற்றார். இயற்றிய வேறு நூல்கள் - மீனாட்சியம்மை குறம், இரட்டை மணிமாலை, நீதிநெறி விளக்கம், மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் முதலியன.

மண் - உலகம். பண் - இசை (இங்குச் செய்யுள்). படைபோன் - பிரமன். விளம்பில் - சொன்னால்.

II அறவுரைப் பகுதி

1. திருக்குறள்

திருக்குறள்: சிறப்புப் பொருந்திய குறள் வெண்பாக்களாலாகிய நூல் என்பது பொருள். அடையடுத்த கருவியாகு பெயர். பதினெண் கீழ்க்கணக்கினைச் சார்ந்தது. அறத்துப் பால், பொருட் பால், காமத்துப்பால் என்னும் முப்பெரும்பிரிவுகளையும் 133 அதிகாரம் என்ற உட்பிரிவுகளையும் உடையது. தமிழ்மறை பொது மறை என்றெல்லாம் புகழப்படுவது. கடைச் சங்ககாலத்து வாழ்ந்த தெய்வப்புலவர் திருவள்ளுவர் இதனை இயற்றியுள்ளார். மயிலையில் பிறந்தவர் என்று கூறுவர். சமயம் எச்சமயமும் பொதுவாகும்.

கல்வி

1 கற்பவை - கற்கப்படும் நூல்களை. கசடு அற - பழுதுஇன்றி. 2 ஏனை - மற்ற. எண் - கணிதம். எழுத்து - இலக்கணம். 3 இதனால் கற்றார் உயர்வும் கல்லாதவர் இழிவும் கூறப்பட்டன. 4 உள்ள நினையுமாறு. 5 இல்லார் போல் - நல்கூர்ந்தார்போல. 6 தொட்ட - தோண்டிய. ஊறும் - சுரக்கும். இஃது எடுத்துக் காட்டுவமை அணியாகும். 7 சாந்துணையும் - இறக்குமளவும். 8 ஒருமைக்கண் - ஒரு பிறப்பின் கண். எழுமையும் - ஏழு பிறப்பினும். ஏமாப்பு - உதவுதல். 9 காமுறுவர் - விரும்புவர். 10 கேடு - அழிவு. விழு - சீரிய. மாடு - செல்வம்.

கேள்வி

1 செவிச் செல்வம் - செவியால் வரும் செல்வம் (கேள்வி) 2 ஈயப்படும் - இடப்படும். 3 செவியுணவு - கேள்வி. அவி - அவிசாகிற உணவு. ஆன்றார் - தேவரைக் குறிக்கும். 4 ஒற்கத்தின் - தளர்ச்சியுறும் போது. 5 ஊற்றுக்கோல் - ஊன்றுகோல். 6 எனைத்தானும் - எவ்வளவு சிறியதாயினும். ஆன்ற பெருமை - நிறைந்த பெருமை. 7 பிழைத்து உணர்ந்தும் - மாறுபாடாக அறிந்த பொழுதும். பேதைமை - அறியாமையைத் தருஞ்சொற்களை. 8 தோட்கப் படாத - துளைக்கப்படாத. 9 நுணங்கிய - நுட்பமான. 10 செவியின் சுவை - செவியால் நுகரப்படுஞ் சுவை - சொற் சுவையும், பொருட் சுவையுமாகும். சொற் சுவை - அணி - குணம் என்னும் இரு வகைத்து. பொருட்சுவை - வீரம் முதலிய ஒன்பது வகையாகும். வாயுணர்வு - வாயால் நுகரப்படும் சுவையுணர்வு - கைப்பு முதலிய அறுவகையாம்.

2. பழமொழி

இது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இதன் ஆசிரியர் முன்றுறையரையனார். இப்பெயரால் முன்றுறை என்ற ஊரை ஆண்ட அரசர் இவர் என்று அறியலாம். இவரது காலம் கடைச் சங்ககாலம். இவர் பாடல்கள் பெரும்பாலும் ஒரு பழமொழியை உட்கொண்டிருக்கும்.

1 வழங்கல் - கொடுத்தல். துய்த்தல் - அனுபவித்தல். வேய் - மூங்கில். 2 ஈய - கொடுத்தால்; கரப்பவர் - ஒளிப்பவர். 3 வடு - குற்றம். நெடுவரை - பெரிய மலை. கல் - மலை. 4 மன்ற - நிச்சயமாக.

3. நீதி வெண்பா

இதன் பெயரைக் கொண்டே வெண்பாக்களால் ஆகியது இந் நூல் என்பது விளங்கும். இதன் ஆசிரியர் இன்னார் என்று நிச்சயமாகத் தெரியவில்லை. சிறந்த நீதிகளைக் கொண்ட இந்நூலை இயற்றியவர் ஔவையார் என்று ஒரு சிலர் கருதுகின்றனர். மேலும் சங்ககால ஔவையைக் காட்டிலும் வேறானவர் என்றுங் கூறுகின்றனர்.

1 பொற்பு - அழகு. புல்லியர் - அற்பர். புகல் - சொல். 2 காதலித்து - விரும்பி. மானுவர் - ஒப்பாவர். வான்மீன் - நட்சத்திரம். இலகிடினும் - விளங்கினாலும். 3 கற்பம் - ஊழிக்காலம். இருபயன் இன்பதுன்பங்கள். கோதை - உவமையாகு பெயர்.

III கதைப் பகுதி

1. வில்லி பாரதம்

கண்ணன் தூது

இதன் ஆசிரியர் வில்லிபுத்தூராழ்வார். சனியூர் என்ற ஊரில் வீரராகவாச்சாரியார் என்ற வைணவருக்குப் பிள்ளையாகப் பிறந்தார். வக்கபாகை வரபதி யாட்கொண்டான் என்றஅரசனால் ஆதரிக்கப்பட்டவர். வடமொழி தென்மொழி இரண்டிலும் வல்லவர் இவர்தம் பாடல்களில் வட சொற்கள் மிகுதியாகக் காணப்படும். சந்தப்பா பாடுவதில் வல்லவர். கி. பி. 15-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவரது மகன் வரந்தருவார் என்பவராவார்.

1 தாது - மகரந்தம். அளி - வண்டு. முரலும் - ஒலிக்கின்ற. பொருது - சண்டைசெய்து. வசை - தாழ்வு.

2. பண - பாம்பு. முதுமை+ஊர் - மூதூர் - அத்தினபுரி. கோடு - சங்கு. அடு - கொல்லுகின்ற. மருப்பு - தந்தம். ஒசித்த - ஒடித்த.

3. வெம்மை+சினம்=வெஞ்சினம். தோம் - குற்றம். இறைஞ்சி - வணங்கி. தவிசு - ஆசனம். ஊனம் - குற்றம்.

4. பைந்தொடி - பசியவளையல்களையுடையவள் (திரௌபதி). எரிதழல் - வினைத்தொகை. வெம்மை+பகை=வெம்பகை - பண்புத்தொகை, இளையாயின்றுய் - பின் வாங்குகிறாய்.

5. அருளிலி - அருளற்றவன் (திருதராட்டிரன்). தாணி - பூமி.

6. அமர் - சண்டை. கங்கைநீர் முடித்தான் - சிவபிரான்.

7. சமர் - சண்டை. அரவு - பாம்பு. துணிந்து - துணிபட்டு. பணிந்து - வணங்கி. இரந்து - யாசித்து.

8. பரிவு - வருத்தம். பவனகுமாரன் - வாயுவின் மைந்தன். வீமன். மலர்க்கை - உருவகம்.

9. பதம் - திருவடி. வழுவாவண்ணம் - தவருதபடி.

10. மறம் - வலிமை. மகவான் - இந்திரன். சிலை - வில். குழல் - கூந்தல்.

11. இகிரி - சக்கரம். பொறை வேந்தன் - தருமன். புகன்ற - சொன்ன. உவர் நிலம் - களர் நிலம். பன்னகம் - பாம்பு. அமிர்தம் - இங்குப் பாலைக்குறிக்கும்.

2. பாஞ்சாலி சபதம்

சூதாட்டச் சருக்கம்

பாஞ்சால நாட்டரசன் துருபதன் மகள் திரௌபதி செய்த சபதத்தைக் கூறும் நூல். இதன் ஆசிரியர் சுப்பிரமணிய பாரதியார். எட்டையபுரத்தில் சின்னசாமி அய்யர், இலக்குமி அம்மை என்ற பெற்றேர்க்குப் பிள்ளையாகப் பிறந்தார்.

பாரதநாடு, செந்தமிழ்நாடு, குயில், கண்ணன் பாட்டு முதலிய நூல்களை இயற்றியுள்ளார். பல பத்திரிகைகளின் ஆசிரியராகவும் தொண்டாற்றியுள்ளார். கடவுட்பற்று, தேசப்பற்று, சமூகச் சீர் திருத்தம், பெண்மை முதலிய பல துறைகளிலும் பாடல்கள் பாடியுள்ளார். 1882-இல் பிறந்து 1921-இல் மறைந்தார்.

அத்தினமா நகரம் - அத்தினபுரி. எண்ணரும் - கணக்கிடமுடியாத. மாந்தர் - மக்கள். எங்கண் - எவ்விடத்தில். வியப்பு - ஆச்சரியம். இத்தினமட்டும் - இந்நாள்வரையில். முழக்கினர் - ஒலித்தனர். வந்தியர் - அரசன் புகழ் பாடுபவர். வெந்திறல் - கொடிய வலிமையுள்ள. பவனி - ஊர்வலம். சேல் - ஒருவகை மீன். எழில் - அழகு.

IV. சிறு நூல்கள்

1. திருவாரூர் நான்மணி மாலை

இதன் ஆசிரியரைப் பற்றி முன்பே கூறியுள்ளோம். நான்மணி மாலை - நான்குவகை மணிகளால் ஆன மாலையைப் போன்று நால் வகைப் பாக்களால் அந்தாதித் தொடை அமையுமாறு பாடப்படுவது. இந்நூல் திருவாரூர்த் தியாகராசப் பெருமானைப் பற்றிப் பாடப்பட்டது.

1. தானமால் களிறு - மதத்தையுடைய பெரிய யானை. ஈகுநர் - கொடுப்பவர். ஒரீஇ - நீங்கி. இலம்பாடு - வறுமை. ஏற்குநர் - யாசிப்பவர். அதான்று - அவ்வாறின்றி. புரவலர் - காப்பவர். இடப்பால் - (அம்மையப்பர் வடிவத்தின்) இடதுபுறம் உமையவளைக் குறிக்கும். மதி - சந்திரன். கொடியார் - கொடியவர். துகிற் கொடிகள். மதியார் - அறிவுடையோர். சந்திரன் (சிலேடை) கமலை - திருவாரூர்.

2. பெம்மான் - பெருமான். கருமான் உரி அதள் - யானையின் உரிக்கப்பட்ட தோல். ஒரு மானும் - ஒப்பற்ற மான் போன்ற உமையவள். சங்கம் - சங்கினாலாய காதணி. தார் - மாலை. அங்கம் - மனம்.

3. வாவி - குளம். அம்போருகம் - தாமரை. புள்வாய் கிழித்த - பகாசுரனாகிய புள்ளின் வாயைக் கிழித்த. தூவி - சிறகு. அம்போர் - அம்பை உடையவர். உகம் . யுகம். ஆவி - உயிர். அம் - அழகிய. போர் - சண்டை. உகந்து - விரும்பி. கூற்று - யமன். நன்னெஞ்சமே - நல்ல மனமே. ஒருக - நினைக்க.

4. நாமம் - அச்சம். வாமபாகம் - இடது பக்கம். நீர்மங்கை - கங்கை. வெண்தலை நிரை - வெண்மையான தலைவரிசை. காமர் - அழகு. விழிக்கயல் - கண்களாகிய மீன்கள்.

V. பல்சுவைப் பகுதி

1. சிலேடை

இருபொருள்படப் பாடுவது சிலேடை. இதன் ஆசிரியர், திருநெல்வேலி மாவட்டத்தில் வாழ்ந்த அழகிய சொக்கநாதப் பிள்ளை என்பவர். தந்தையின் பெயர் வன்னியப் பிள்ளை. வேளாளர் மரபு. காலம் : 70 ஆண்டுகட்கு முற்பட்டவர்.

சிவனுக்குச் சூரியன், சந்திரன், அக்கினி (நெற்றிக்கண்) என்ற மூன்று கண்கள். கள் - தேன்.

2. தமிழ் நாடு

இதன் ஆசிரியர் தமிழ்ப் பெரியார் திரு. வி. கலியாண சுந்தரனார். தமிழ் மொழி, தொழிலாளர் இயக்கம், தேசபற்று ஆகிய பல துறைகளில் தொண்டு புரிந்தவர் இவர் இயற்றிய நூல்கள் எண்ணிலடங்கா. தோற்றம் 1883. மறைவு 1953 செப்டம்பர்.

இறை - தெய்வம். மாண்பு - பெருமை.

3. சீட்டுக் கவி

இதன் ஆசிரியர் அந்தகக் கவி வீரராகவ முதலியார். பிறவிக் குருடர். 18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். தந்தை வடுகநாத முதலியார். சைவசமயம். பல நூல்களைப் பாடியுள்ளார்.

விரகன் - திறமையுள்ளவன். கந்தருவம் - இசை. குதிரை. கந்துகம் - பந்து. குதிரை. கொக்கு - கொக்கு. குதிரை. இவ்விதம் இருபொருள் படும்படி சொற்களை யமைத்துப் பாடியுள்ளார். குதிரையைக் குறிக்கும் பல சொற்கள் வந்துள்ளன.

4. மலரும் மாலையும்

இதன் ஆசிரியராகிய கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் திருவிதாங்கூரைச் சார்ந்த தேரூர் என்னும் கிராமத்தில் 1866-ஆம் ஆண்டில் தோன்றினார்கள். பெற்றோர் - சிவதாணுப் பிள்ளை, ஆதிலட்சுமி அம்மையார். பல நூல்களை இயற்றியுள்ளார்.

திருமகள் - இலக்குமி (செல்வம்). கலைமகள் - சரசுவதி (கல்வியறிவு).